Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 20 புதன்கிழமை (04-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:220

# அவசரகாலச் சட்ட நீடிப்புக்கான வாக்கெடுப்பில் அரசு தோல்வியுறும்?

## தமிழ்நாடு மாநில அரசைக் கலைக்கும் மத்திய அரசின் முயற்சி கைகூடவில்லை

### எனினும் ஜெயலலிதா அரசுக்குக் கடும் எச்சரிக்கை

புதுடில்லி,ஜூலை4

முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி மற்றும் இரு மத்திய அமைச்சர்களை கைது செய்யும் விடயத்தில் ஜெயலலிதா தலைமையிலான தமிழ்நாடு மாநில அரசு நடந்து கொண்ட முறைக்காக அந்த மாநில அரசைக் கலைப்பதற்கு மத்திய அரசில் ஆட்சியைக் கொண்டிருக்கும் தேசிய ஐக்கிய முன்னணி முயற்சி செய்தது எனினும் -

எதிர்க்கட்சிகளான இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவு இம்முயற்சிக்குக் கிட்டாததால் அதனை நிறைவேற்ற முடியவில்லை என்று புதுடில்லி செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசமைப்பின் 356 ஆவது பிரிவைப் பயன்படுத்தி ஒரு மாநில அரசை, மத்திய அரசு கலைத்தால் அது தொடர்பான பிரேரணை ஒன்று பின்னர் நாடாளுமன்றத்திலும் மேல் சபையான ராஜ்யசபையிலும் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள தேசிய ஐக்கிய முன்னணிக்கு ராஜ்யசபையில் பெரும்பான்மை இல்லை என்று குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் ஆட்சியில் உள்ள அ.தி.மு.க. அரசைக் கலைக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தரமுடியாது என்று ராஜ்யசபையில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸும், இடதுசாரிக் கட்சிகளும் அறிவித்து விட்ட நிலையில், மாநில அரசைக் கலைக்கும் முடிவைக் கைவிடுவதைத தவிர மத்திய அரசுக்கு வேறு வழி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி கைதான முறை குறித்து சென்னை நீதிமன்று கடும் கண்டனம்

சென்னை,ஜூலை4

கலைஞர் கருணாநிதி கைது செய்யப்பட்ட முறை குறித்து சென்னை நீதிமன்றம் ஒன்று தமிழ்நாடு மாநில அரசுக்குக் கடும் கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

கருணாநிதி கைது செய்யப்பட்ட - மேம்பாலம் கட்டுவதில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பான - வழக்கில் கைது செய்யப்பட்டிருக்கும் வேறு இரு அதிகாரிகளுக்கு பிணை வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிவான் அசோக்குமார் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் இந்தக் கண்டனத்தை வெளியிட்டார்.

முன்னாள் மாநில தலைமைச் செயலாளர், மேம்பால சாலை ஆய்வாளர் ஆகிய இருவர் சார்பிலும் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுகளை நீதிவான் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பிணை அனுமதி வழங்கினார்.

கருணாநிதி தொடர்பாகவோ, சென்னை மேயர் ஸ்டாலின் தொடர்பாகவோ பிணை மனுக்கள் சமர்ப்பிக்கப்படாததால் அது குறித்து நீதிமன்றம் ஆராயவில்லை.

கைதான நாளன்று கருணாநிதியை முதலில் மருத்துவமனைக்குக் கொண்டு சென்று பரிசோதிக்கும்படி தாம் விடுத்த உத்தரவு ஏன் பின்பற்றப்படவில்லை என்று நீதிமன்றத்தில் ஆஜரான பொலீஸாரைப் பார்த்துக் கேட்ட நீதிவான் அதற்காக நீதிமன்றத்தின் கடும் கண்டனத்தையும் தெரிவித்தார்.

முன்னாள் முதலமைச்சரும், கௌரவம் மிக்க ஓர் அரசியல்வாதியுமான மு.கருணாநிதி ஒரு பிச்சைக்காரரைப் போல சிறைச்சாலை வாசலில் நிலத்தில் அமர்ந்திருக்க வைக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 2 மத்திய அமைச்சர்களுக்கு எதிரான வழக்குகளையும் மாநில அரசு வாபஸ்

சென்னை,ஜூலை4

இந்திய மத்திய அமைச்சர்கள் முரசொலிமாறன், ரி.ஆர்.பாலு ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களையும், வழக்குகளையும் விலக்கிக் கொண்டுவிட்டதாக தமிழக மாநில அரசு நேற்று மாலை அறிவித்தது.

கருணாநிதி மற்றும் முரசொலி மாறன், ரி.ஆர். பாலு ஆகியோர் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக தமிழக மாநில அரசுக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்திய மத்திய அமைச்சரவை நேற்றிரவு கூடவிருந்த சமயத்துக்குச் சிலமணிநேரம் முன்பதாக வழக்கு வாபஸ் பற்றிய அறிவிப்பை மாநில அரசு விடுத்தது.

மத்திய அரசினதும் பிரதமரினதும விருப்பத்துக்கு இணங்கவும், மத்திய - மாநில அரசுகளுக்குமிடையிலான நல்லிணக்கத்தைப் பேணவும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவித்தது.

ஆனால் இந்தச் செய்திக்குறிப்பில தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தவறானவை என்று பிரதமர் அலுவலகத்திலிருந்து நேற்று இரவு வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

முரசொலிமாறனையும், ரி.ஆர். பாலுவையும் நீதிமன்றக் காவலிலிருந்து விடுவிக்கும் உத்தரவு ஒன்றை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சிறையில் கருணாநிதியின் உடல் நிலைமை மோசம்!

சென்னை,ஜூலை4

சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருக்கும் கருணாநிதியின் உடல் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறையில் அவரைச் சந்திப்பதற்காக நேற்றும் நேற்று முன்தினமும் பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் சிறைக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர். அவர்களும், கருணாநிதியின் உறவினர்களும், அவரது டாக்டர்களுமே கருணாநிதியின் உடல் நிலைமை மோசமாக இருப்பதாகத் தெரிவித்தனர்.

அவரது இரத்த அழுத்தம் அதிகரித்துள்ளது; அவர் சோர்வுற்ற நிலையில் உள்ளார்; இரு கால்களும் வீங்கியுள்ளன; எழுந்து நிற்கும் போது அவர் தள்ளாடுகின்றார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மாற்று வழிமுறைகளை ஆராய்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை4

**நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கான பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் எதிர்த்து வாக்களிப்பதற்கான சூழ்நிலை தோன்றியிருப்பதை அடுத்து, அந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் அரசுத் தரப்பு தோல்வியுறக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**அவ்வாறு அவசரகாலச் சட்டவிதிகளை நீடிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டால், அதனால் உருவாகக் கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான மாற்று வழிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கக் கோரும் பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பது என்று ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்றுக் கூடி முடிவு செய்துவிட்டது.

ஜே.வி.பியும் அத்தகைய முடிவை எடுத்திருப்பதாக அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடு மீதான வான் தாக்குதலை அமெரிக்காவும் கவலையுடன் கவனிப்பு

கொழும்பு,ஜூலை4

யாழ்.குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது வார இறுதியில் குண்டுத்தாக்குதல் நடத்துவதென ஸ்ரீலங்கா அரசு எடுத்திருந்த முடிவையிட்டு கவலையடைகின்றோம். அதேசமயம் அது குறித்து கவனத்திலும் எடுத்துள்ளோம்.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் ஆள்புல இறைமையைப் பாதுகாப்பதற்கான உரிமையை மதிக்கும் அதேசமயம் வன்செயல்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### நிமலராஜன் படுகொலை விசாரணை:

## சம்பவம் நிகழ்ந்த பகுதி காவலரண்களில் கடமை புரிந்த சிப்பாய்கள் யார்?

### விவரம் கோருகிறார் நீதிவான்

யாழ்ப்பாணம்,ஜூலை4

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று அவரது வீட்டுக்கு அருகில் அமைந்திருந்த காவலரண்கள் மற்றும் அங்கு பணிபுரிந்த படையினர் விவரங்களைச் சமர்ப்பிக்கும்படி யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் படுகொலை தொடர்பான விசாரணை நேற்று யாழ். நீதிமன்றத்தில் இடம்பெற்ற சமயம் இதுவரை நடந்த விசாரணைகளின் அறிக்கையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்தனர்.

நிமலராஜன் படுகொலை தொடர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### படையினரின் பாலியல் வல்லுறவுக் கொடூரங்களைக் கண்டித்து

## குடாநாட்டில் பூரண ஹர்த்தாலுக்கு தமிழ்க் கட்சிகள் ஒருமித்த அழைப்பு

### வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கு ஸ்தம்பிக்கும் நிலை

யாழ்ப்பாணம்,ஜூலை4

தமிழ்ப் பெண்கள் மீதான படையினரின் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைக் கண்டித்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வைத்தே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும், யாழ்.மேயருமான என். ரவிராஜ், புளொட் அமைப்பின் பிரமுகரும் சாவகச்சேரி நகரசபைத் தலைவருமான பெனடிக் தனபாலசிங்கம், ஈ.பி.ஆர்.எல். எவ்.(சுரேஸ் அணி) பொதுச் செயலாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ அமைப்பின் பிரமுகர் சிவம் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இந்தக் ஹர்த்தாலுக்கு குடாநாட்டில் உள்ள சகலரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று பாடசாலை மாணவர் அமைப்புக்கள், பொது அமைப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மிதி பலகையில் பயணம் செய்தவர் விழுந்து காயம்

யாழ்ப்பாணம்,ஜுலை4

மினி பஸ்ஸின் மிதிபலகையில் தொங்கிக் கொண்டு பயணம் செய்த இளைஞன் தவறிவிழுந்து காயமடைந்தார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து, பருத்தித்துறைக்கு சென்று கொண்டிருந்த மினி பஸ்ஸிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

கட்டைப்பிராயப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த இராசேந்திரம் சுதாகரன் (வயது 27) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

(க-15)

## திருமண வீட்டில் சைக்கிளைத் திருடியவன் சிக்கினான்

யாழ்ப்பாணம்,ஜுலை4

திருமண வைபவம் நடந்த வீடு ஒன்றுக்கு இரவுவேளை சென்று சைக்கிளைத் திருடியவன் அயலவர்களால மடக்கிப்பிடிக்கப்பட்டான்.

பருத்தித்துறை, அவ்வொல்லைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

திருமண வைபவம் நடந்த சிவலிங்கம் என்பவரது வீட்டுக்கு இரவு 8 மணியளவில் சென்ற திருடன் அங்கே வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்களில் ஒன்றை எடுத்துக்கொண்டு மெல்ல நழுவினான். இதனை அவதானித்த சிலர் கூக்குரலிட்டவாறு அவனைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்தனர்.

அன்றிரவு முழுவதும் அப்பகுதி வாசிகசாலையில் கட்டிவைக்கப்பட்ட அத் திருடன் மறுநாள் காலை பருத்தித்துறைப் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டான்.

(க-15)

## தும்பளையில் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜுலை4

தும்பளை தெற்குப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலை, சிக்கனக் கடன் உதவு கூட்டுறவுச் சங்கம், சனசமூக நிலையம் ஆகியனவற்றைக் கொண்ட கட்டடம் இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

'போருட்' நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா உதவியுடன் அப்பகுதி மக்களின் நிதி உதவியுடனும் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தை போருட் நிறுவன திட்ட முகாமையாளர் மாறன் பிறன்ஸ்விக் திறந்து வைக்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆசிவசுவாமி கலந்து கொள்வார். (க-15)

## திருத்தம்

இன்றைய உதயனில் 6 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள '*சிவமகாராசாவுக்கு பட்டம் வழங்கிக் கௌரவிப்பு*' என்ற செய்தியில் '*கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்*' என்ற வாசகத்துக்குப் பதிலாக '*கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்*' என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. அதைத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## இமையாணன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம்,ஜுலை4

இமையாணன் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைத் தாங்கள் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாக ஊரெழுப் படையினரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இமையாணன் தெற்கு, முதலியார் வளவைச் சேர்ந்த சின்னப்பு கிருஷ்ணசாமி தம்பியான் என்பவரே நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கைது செய்யப்பட்டவராவார்.

இவரது கைது தொடர்பான 'ரசீது' மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரியிடம் படையினரால் வழங்கப்பட்டுள்ளது.

(க-10)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 1953 . 04 . 10 | | 2000 . 07 . 15 |

கோண்டாவில் கிழக்கு
**திருமதி சிவபாக்கியம் சற்குணலிங்கம்**
**(சண்முகலிங்கம்)**

திதி:ஆனி பூர்வ பக்க சதுர்த்தசி 04-07-2001

குடும்பத்தின் ஒளி விளக்காய் குல விளக்காய்த் திகழ்ந்தாயே....!
இல்லத்தில் ஒளி மறைந்தால் உள்ளத்தின் துயர் ஆறுமோ?
மாயமாய் வந்த காலன் ஜாலமாய் அழைத்ததேனோ?
களை இழந்த கணவரும், பிள்ளைகளும் துயர் கொண்டு
அழுவதற்கா துயில் கொள்ள நினைத்தாய் - அம்மா?
தாய் செய்த தவத்தால் நீ மண்ணில் வந்தாய்!
சேய் செய்த தவம்தான் என்ன? நீ விண்ணில் செல்லவா....
நோய் கொண்டு போனதோ உன்னை எம் கண்ணை விட்டு?
வாய்விட்டுப் புலம்புகிறோம் மீண்டும் இனிக் காண்பது எப்போது....?

*இராஜ வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள்.**

(89721)

## அவசர கலந்துரையாடல்

**இராமநாதன் நுண்கலைத்துறை 3ஆம் வருட (இசை, நடன) மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று (04-07-2001) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இசைத்துறை மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைவரையும் சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

*இராமநாதன் நுண்கலைத்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(89720)

3ஆம் வருட
மாணவப் பிரதிநிதி

## மாபெரும் சதுரங்கப் போட்டி

**யாழ்.சதுரங்க சம்மேளனமும், இலங்கை சதுரங்க சம்மேளனமும் (SLCF) இணைந்து நடத்தும்**
**இளையோர்க்கான மாபெரும் சதுரங்கப் போட்டி - 2001**

மேற்படி போட்டியானது இம்மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் (07,08/07/2001) சனியும் ஞாயிறும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

*முக்கிய குறிப்பு:-* போட்டிக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் போட்டியில் கலந்துகொள்ள விரும்பின் காலை 8.00 மணிக்கு (07.07.2001அன்று) யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்குச் சமுகந்தரவும்.

*70/1 வைமன் வீதி,*
*நல்லூர்.*

**- செயலாளர்.**

(C/17295)

## மரண அறிவித்தல்

**பொன்னையா சோமசுந்தரம்**

(உரிமையாளர் பொன்.சோமசுந்தரம் நகைமாடம், நவாலி)

சந்தைவீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த பொன்னையா சோமசுந்தரம் நேற்று (03.07.2001) செவ்வாய்க்கிழமை காலை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் விமலாதேவி, நாகச்சந்திரன்(கனடா), விமலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சச்சிதானந்தன், குமுதா(கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.*

(89718)

தகவல்
க.சச்சிதானந்தன்
(மருமகன்)

**யாழ். - நல்லூர் வாழ் மக்களின் நன்மை கருதி வைமன் வீதியில் வைத்திய சேவை ஆரம்பம்**

## CENTRAL CLINIC - சென்றல் கிளினிக்

☆ குழந்தை வைத்திய சிகிச்சை
☆ கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சை
☆ பொது வைத்திய சிகிச்சை
☆ பெண் நோயியல் சிகிச்சை
☆ தோல் வைத்திய சிகிச்சை
☆ சிறு சத்திர சிகிச்சை
☆ ஆஸ்துமா (Asthma) நோயாளர்களுக்கான (Nebulise) நெபுலைசர் பிடித்தல்

**என்பன M.B.B.S. வைத்தியர்களினால் நடத்தப்படும்.**

| | | |
|---|---|---|
| விசேட பரிசோதனைகள்:- | இரத்தக் குளுக்கோசு பரிசோதனை | (Blood Sugar Test) |
| | சிறுநீர் குளுக்கோசு பரிசோதனை | (Urine Sugar Test) |
| | கர்ப்பிணி பரிசோதனை | (Pregnancy Test) |

நோயாளர்களைப் பார்வையிடும் நேரம்:- தினமும் காலை 6.00 - 7.30 (புதிய நேரம்)
மாலை 4.00 - 8.00 (புதிய நேரம்)

*18/3 வைமன் வீதி,*
*(எடிசன் றியூட்டரிக்குப் பின்பாக)*
*யாழ்ப்பாணம்.*

(89743)

**- நிர்வாகத்தினர்.**

## புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலய மண்டலாபிஷேகமும் அலங்கார உற்சவமும்

*ஆரம்பம்:-* 02-07-2001 தொடக்கம் 48 நாள்கள் வரை இந்த அலங்கார உற்சவ காலத்தில் தினமும் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

தொடர் சொற்பொழிவு வழங்குபவர்:- நா.கலாதரசர்மா
*(யாழ்.பல்கலைக்கழக மாணவன், சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், இளஞ் சைவப்புலவர்)*
விடயம்: "விநாயகர் புராணம்"

***குறிப்பு:*** கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மூலம் நேரடி அஞ்சல் செய்த பிரதிகளையும் வீடியோ ஒளிப்பதிவு நாடாக்களையும் அவ்வூர் மக்களினால் நடத்தப்பட்ட மகாயாகத்தினுடைய புகைப் படப் பிரதிகளையும் ஆலய பரிபாலன சபையினரிடம் பெற்றுக்கொள்ளலாம். வெளிநாட்டில் உள்ள அன்பர்களிற்கு வேணி களஞ்சியம் மூலம் மகாயாக விபூதி பிரசாதமும் மேற் குறிப்பிட்ட பிரதிகளும் அனுப்பி வைக்கப்படும். மண்டலாபிஷேகம் செய்ய விரும்பும் அடியார்கள் ஆலய பரிபாலன சபையினரிடம் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்:
**இந்தன் முத்து விநாயகர் ஆலய பரிபாலனசபையினர்.**

(சி173303)

## ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவித்தல்

**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**

*இடம்:-* கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, ஜுபிலி மண்டபம்
*காலம்:-* 22.07.2001 ஞாயிற்றுக்கிழமை
*நேரம்:-* பிற்பகல் 3.00 மணி

தலைமை : திரு.ந.சிவகடாட்சம் (தலைவர்)
அதிதி : திரு.சு.உதயதாஸ்
(சிரேஷ்ட விரிவுரையாளர், விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

காலை சிறப்பு நிகழ்வு: *கல்லூரி மாணவர்கள் எதிர் பழைய மாணவர்கள்*
கரப்பந்தாட்டம்
வலைப்பந்தாட்டம்
துடுப்பாட்டம்

1.30 மதிய போசனம்

மாலை:
பொதுக் கூட்டமும், இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும்.

*குறிப்பு:* மதிய போசனத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் 15.07.2001க்கு முன்பு கல்லூரி அலுவலகத்தில் ரூபா 100/= செலுத்திப் பெயரை பதிந்து கொள்ளவும். பிரேரணைகளையும் மேற்படி திகதியில் சமர்ப்பிக்கலாம்.

ஜீ.ரி.ஞானசேகரவேல்,
-கௌரவ செயலாளர்-
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

(89737)

# ஈராக் மீதான தடைகளை நீடிப்பதில் பெரும் இழுபறி

நியூயோர்க்,ஜூலை4.

ஈராக் மீதான பொருளாதாரத் தடையை மேலும் நீடிக்கும் பிரேரணையை ஐ.நா.சபையில் நிறைவேற்ற முடியாமல் அமெரிக்காவும், பிரிட்டனும் திணறுவதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யா இந்தப் பிரேரணைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் பிரிட்டனும் அமெரிக்காவும் அந்தப் பிரேரணைக்கு ஆதரவு திரட்ட முடியாமல் உள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஈராக் மீது ஐ.நா.பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இந்தத் தடைகளைத் தளர்த்த வேண்டும் என்று அரபு நாடுகள் உட்படப் பல நாடுகள் ஐ.நாவை வற்புறுத்தி வருகின்றன.

பொருளாதாரத் தடைகள் தளர்த்தப்பட்டால், ஈராக் மீண்டும் ஆயுதங்களை வாங்கிக் குவித்துவிடும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கூறுகின்றன.

ஆனால் பொருளாதாரத் தடைகளால் அப்பாவி ஈராக்கிய மக்களே அதிகம் பாதிக்கப்படுவதாகக் கூறி வரும் ரஷ்யாவுக்கு பிரான்ஸ் உட்பட பல நாடுகள் ஆதரவளித்து வருகின்றன.

(ஒ)

### பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்ட

# இந்திய சைக்கிளோட்ட வீரரை சந்திக்க அதிகாரிகளுக்கு அனுமதி

இஸ்லாமாபாத்,ஜூலை4

'விசா' இன்றி பாகிஸ்தானுக்குள் நுழைந்ததற்காக, பெஷாவர் சிறையில் 3 வருடங்கள் தண்டனை அனுபவித்துவரும் இந்திய சைக்கிள் பயண வீரர் பிகாஸ் சிங்கை இந்திய தூதரக அதிகாரிகள் சந்திக்க பாகிஸ்தான் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பல தடவைகள் வேண்டுகோள் விடப்பட்ட பின்பு, அடுத்த வாரம் பிகாஸ்சிங்கை சிறையில் சந்திக்க, அனுமதி வழங்க பாகிஸ்தானிய அதிகாரிகள் தற்போது சம்மதித்துள்ளனர்.

சைக்கிளில் மிக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளும் பிகாஸ் சிங், கடந்த வருடம், பாகிஸ்தானுக்குள் 'விசா' இன்றி நுழைந்ததற்காகக் கைது செய்யப்பட்டு, வழக்கு விசாரணைகளின் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

# 'மைக்ரோ சொஃப்ட்' நிறுவனத்தை பிரிக்கும் தீர்ப்புத் தள்ளுபடி

வாஷிங்டன்,ஜூலை4

புகழ்பெற்ற கணனி உற்பத்தி நிறுவனமான 'மைக்ரோ சொ.ஃப்ட்' நிறுவனத்தை இரண்டாகப் பிரித்து இரு நிறுவனங்களாக உருவாக்கும்படி அமெரிக்க மாவட்ட நீதிமன்றம் ஒன்று அளித்த தீர்ப்பை, அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

'மைக்ரோ சொ.ஃப்ட்' நிறுவனம் சட்ட விரோதமாகக் கணனி உற்பத்தித்துறையில் தனியுரிமையுடன் செயற்படுவதாகவும் -

அதன் ஏகபோக தனியுரிமை காரணமாகப் பிற நிறுவனங்கள் விதிமுறைகளுக்கு ஒவ்வாத வகையில் ஒடுக்கப்படுவதாகவும் -

மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

அதில் 'மைக்ரோ சொ.ஃப்ட்' நிறுவனத்தின் ஏகபோக தனியுரிமைச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த, அதனை இரண்டாகப் பிரிக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான மேன்முறையீட்டை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை தள்ளுபடி செய்ததுடன், புதிய நீதிபதிகள் மூலம் மீண்டும் அந்த வழக்கை விசாரிக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

# சீனாவுடன் தைவானை இணைக்க படைப்பலம் பிரயோகிக்கப்படும்

### அதிபர் ஜியாங் செமின் தெரிவிப்பு



பெய்ஜிங்,ஜூலை4

தைவானைச் சீனாவுடன் இணைப்பதற்குப் படைப்பலம் பிரயோகிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் சீனா அதற்கும் தயங்காது.

- இவ்வாறு அறிவித்துள்ளார் சீன அதிபர் ஜியாங் செமின்.

பெய்ஜிங்கில் நடைபெற்ற சீன கமியூனிஸ்ட் கட்சியின் 80ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தைவானுக்கு அமெரிக்கா ஆயுததளபாட உதவிகளை வழங்கி வருவது குறித்துக் கண்டனம் தெரிவித்த அவர், இத்தகைய செயல்களை அமெரிக்க உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

1949 இல் சீனாவை ஒருங்கிணைத்து சீனக் குடியரசை உருவாக்கியதற்காகப் பெருந்தலைவர் மா ஓ சேதுங்குக்கு அவர் நன்றியும் தெரிவித்தார்.

### போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை:

# ஈரானில் 4 நாள்களில் 11 ஆயிரம் பேர் கைது!

தெஹ்ரான்,ஜூலை4

ஈரானில் போதைப் பொருள் விற்பனையாளர்கள் மற்றும் பாவனையாளர்களுக்கு எதிராகப் பொலீஸார் கடந்த 4 நாள்களாக மேற்கொண்ட முற்றுகை நடவடிக்கையில் 11 ஆயிரத்து 892 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் 884 கிலோகிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் -

போதைப் பொருள்களை விற்று வந்த 9 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

6 கோடியே 30 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட ஈரானில் சுமார் 15 லட்சம் பேர் போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ளனர். மேலும் 5 லட்சம் பேர் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளனர்.

உலகின் பெரும் போதைப் பொருள் தயாரிப்பு நாடு என்று கூறப்படும் ஆப்கானிஸ்தான் அண்டை நாடாக இருப்பதாலேயே, ஈரானில் போதைப் பொருள்கள் தாராளமாகக் கிடைப்பதாகக் கருதப்படுகிறது.

(ஒ-4)

## மனோஜ் பிரபாகர் கைதானார்

புதுடில்லி,ஜூலை4

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மனோஜ் பிரபாகர் பங்குதாரராக உள்ள நிதிநிறுவனம் ஒன்று பொதுமக்களின் பணத்தை மோசடி செய்ததாக கூறப்படுவது தொடர்பாக அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

உத்திராஞ்சல் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார். (ஒ)

# தமிழக அரசைக் கலைக்கக்கூடாது; காங்கிரஸ், கம்யூனிஸ்ட் எச்சரிக்கை!

புதுடில்லி,ஜூலை4

**தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி, மத்திய அமைச்சர்களான முரசொலிமாறன், ரி.ஆர்.பாலு ஆகியோர் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் தமிழக அரசுக்கு எதிராகத் தன்னிச்சையான நடவடிக்கை எதனையும் எடுக்கக்கூடாது என்று மத்திய அரசுக்கு காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.**

மேற்படி கைது விவகாரத்தில் அரசமைப்பு விதிகளை தமிழக அரசு சீர்குலைத்துவிட்டதாகக் கருதி, தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்படலாம் என்று செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ள சமயத்திலேயே அ.தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்த இரு தேசியக் கட்சிகளும், தமிழக அரசைக் கலைப்பதற்கு எதிராகக் குரல் எழுப்பியுள்ளன.

குடியரசுத் தலைவர் ஆட்சியை தமிழகத்தில் நடைமுறைப்படுத்துவது, அரசமைப்பு விதிகளை முற்றிலும் தவறாகப் பயன்படுத்துவதற்கு ஒப்பாகும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைச் செயற்குழுவான 'பொலிட் பீரோ' நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டது.

உலக அரங்கில்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 356ஆவது பிரிவைப் பயன்படுத்தி, குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவரும் அளவுக்கு தமிழகத்தில் நிலைமை மோசமாக வில்லை என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழக சட்ட அமைச்சர் பொன்னையன் தலைமையிலான அ.தி.மு.க. பிரதிநிதிகள் குழுவை நேற்றுப் புதுடில்லியில் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெய்பால்ரெட்டி தமிழகத்தில் அரசமைப்புச் சீர்கேடு எதுவும் இடம்பெறாததால், மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருவதைத் தமது கட்சி ஆதரிக்காது என்றார்.

மத்திய அமைச்சர்கள் கைது செய்யப்பட்டது குறித்து கருத்துக் கூறும்படி செய்தியாளர்கள் கேட்டபோது, இருதரப்புக்களும் தத்தமது வாதங்களைக் கூறிவரும் சமயத்தில், மாநில அரசைக் கலைக்கும் அளவுக்கு நிலைமை மோசமாக வில்லை என்று ஜெய்பால்ரெட்டி தெரிவித்தார்.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில், மிக அதிக தடவைகள் அரசமைப்பின் 356ஆவது பிரிவைப் பயன்படுத்தி மாநில அரசுகள் கலைக்கப்பட மத்திய காங்கிரஸ் அரசுகளே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. அதேசமயம், இந்தியாவில் தி.மு.க.அரசுகளே அதிக தடவைகள் கலைக்கப்பட்டன. (ஒ-4)

## பீட்சாம்பிரஸ் அதிர்ச்சித் தோல்வி

லண்டன்,ஜூலை4

1993ஆம் ஆண்டு முதல், கடந்த 7 வருடங்களாக 'விம்பிள்டன் டெனிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தொடர்ந்து 'சம்பியன்' பட்டம் பெற்று வந்த உலகின் முதல் நிலை ஆட்டக்காரன் பீட்சாம்பிரஸ் தற்போது நடைபெறும் 2001ஆம் ஆண்டு விம்பிள்டன் போட்டியில் நேற்று முன்தினம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

சுவிற்சர்லாந்து வீரரான 19 வயது றொகர் ஸ்வெட்ரா நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பீட்சாம்பிரஸைத் தோற்கடித்தார்.



பிரிட்டனைச் சேர்ந்த போல்ட்டன் என்பவர், தனது செல்லப் பிராணியான 'கிளிம்பா' என்ற பெண் நாயின் பின்னங்கால்கள் இரண்டும் செயலிழந்ததால், அதற்கு ஒரு சக்கரவண்டியை இணைத்து நடமாட வசதியேற்படுத்தியுள்ளார். இதனால் மகிழ்ச்சியோடு 'கிளிம்பா' ஓடி வரும் காட்சியைப் படத்தில் காணலாம்.

# கருணாநிதியை சிறையிலிருந்து மீட்க தற்கொலைப்படை அமைப்போம்

### தி.மு.க. தொண்டர்கள் அறைகூவல்

சென்னை,ஜூலை4

தமிழகப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.கருணாநிதியை உடனடியாக விடுதலை செய்யாவிட்டால், அவரை விடுவிக்கத் தாம் தற்கொலைப்படையாக மாறப்போவதாக தி.மு.க. தொண்டர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை கருணாநிதி கைது செய்யப்பட்டது முதல், தி.மு.கவின் தலைமையகமான அறிவாலயத்தில் கூடியுள்ள தொண்டர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை எதிர்த்து கோஷங்களை எழுப்பும் அவர்கள் தமிழக அரசை உடனடியாகக் கலைக்கும்படி மத்திய அரசைக் கோரிவருகிறார்கள்.

(ஒ)

### தேர்தலில் கிடைத்த வெற்றிக்காக

# குருவாயூர் கோயிலில் ஜெயலலிதா 50 பவுண் கிரீடம், யானை காணிக்கை

குருவாயூர்,ஜூலை4

கருணாநிதி கைது விவகாரததால் தமிழகம் அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருக்க, நேற்று முன்தினம் தனி விமானத்தில் கேரளா மாநிலம் சென்ற தமிழக முதல்வர் ஜெயலலிதா அங்கு குருவாயூர் கிருஷ்ணன் கோயிலுக்குச் சென்று யானைக்குட்டி ஒன்றையும், 50 பவுண்கள் எடையுள்ள தங்கக்கிரீடத்தையும் காணிக்கையாக வழங்கினார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றதற்காக, மலையாள சோதிடர் ஒருவரின் ஆலோசனைப்படி இந்தக் காணிக்கைகளை ஜெயலலிதா குருவாயூர்க் கோயிலுக்கு வழங்கியதாகக் கூறப்படுகிறது.

முன்னதாக நேற்று குருவாயூர்க் கோயிலுக்கு ஜெயலலிதா வந்தபோது, அவரை கோயிலுக்குள் அனுமதிக்கக்கூடாது என்று கோரி, அங்கு கேரள பாரதீய ஜனதாக் கட்சியின் இளைஞர் அமைப்பினர் கறுப்புக் கொடி காட்டிப் போராட்டம் நடத்தினர். அவர்களைக் கலைப்பதற்கு பொலீஸார் நடத்திய தடியடியில் 26 பேர் காயமடைந்ததுடன், 8 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.



பாதுகாப்புப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி, கேரள முதல்வர் ஏ.கே. அன்ரனி, கேரளா வருகையை ஒத்திப்போடும்படி ஜெயலலிதாவைக் கேட்டுக் கொண்டதாகவும் -

ஆனால் அதையும் மீறியே ஜெயலலிதா கேரளாப் பயணத்தை மேற்கொண்டதாகவும் -

கேரள அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-ஒ)

# இஸ்ரேலியப் படையினர் சுட்டு மேற்குக் கரையில் பலஸ்தீனர் பலி!

### யுத்தநிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்

காஸா,ஜூலை4

மேற்குக் கரைக் கிராமம் ஒன்றிற்குள் தடையை மீறி நுழைய முயன்ற பலஸ்தீனர் ஒருவர் நேற்று முன்தினம் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பலஸ்தீனத் தீவிரவாதிகளால் மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேலியர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சில மணித்தியாலங்களில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதேசமயம், இஸ்ரேலியத் தலைநகர் டெல்அவிவ்வில் இரண்டு கார் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் -

இவற்றுக்கு பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பொன்று பொறுப்பேற்றுள்ளதாகவும் -

இஸ்ரேலிய இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் மத்தியஸ்தத்திலான யுத்த நிறுத்தத்தை மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் நடைமுறைப்படுத்துவதில், இந்தச் சம்பவங்கள் சிக்கலான நிலையை உருவாக்கியிருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 13ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தத்தின் தொடக்க நாள்களில் மேற்காசியாவில் ஓரளவு அமைதி நிலவியது.

ஆனால் கடந்த வாரம் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே வன்முறை மோதல்கள் மீண்டும் அதிகரித்ததில், இதுவரை 15 பலஸ்தீனர்களும் 8 இஸ்ரேலியர்களும் மத்திய கிழக்கின் மேற்குக் கரை மற்றும் காஸாவில் கொல்லப்பட்டுள்ளனர். (ஒ-4)

ஐ. தே. கட்சிக்குப் பதிலடியாக

# ஆட்சியைத் தக்க வைக்க அரசும் வெகுஜனப் போராட்டம்

## நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

அரசுக்கு எதிராக ஐ. தே. கட்சி ஆரம்பித்துள்ள வெகுஜனப் போராட்டங்களுக்கு எதிராக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் அரசும் வெகுஜனப் போராட்டங்களை நடத்தவிருக்கின்றது. அந்தப் போராட்டங்கள் மூலம் மக்களின் ஆதரவுடன் ஆட்சியைத் தக்கவைப்போம்

ஜனாதிபதிசந்திரிகாகுமாரதுங்க இப்படிக் கூறியுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

''நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்காக என்னாலான சகல முயற்சிகளையும் 'நான் மேற்கொண்டுள்ளேன். இதையிட்டுப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அமைச்சர்களோ குழப்பம் அடையத் தேவையில்லை'' என்றும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

'ஆட்சியைப் பாதுகாப்போம்' என்ற அறைகூவலுடன் நடத்தப்படவிருக்கும் இந்தப் போராட்டங்களில் முதற் கட்டப் போராட்டங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நாடெங்கும் இடம்பெறும் என்றும்—

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடக்கும் தினங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் என்றும்—ஜனாதிபதி தெரிவித்தார். (ம-3-4)

# காணாமற் போனோர் குறித்து விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காணாமற்போன 4பேர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக சாட்சிகளை யாழ். பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

காணாமற் போனவர்களின் பெயர் விவரமும் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் பெயர் விவரமும் வருமாறு:-

★ சின்னத்தம்பி சிவலிங்கம் (கோவை இல. பி.125) சாட்சிகள் — வல்லிபுரம் சிவலிங்கம் (ஆஸ்பத்திரி வீதி, சங்கானை), பரமலிங்கம் (பேக்கறி உரிமையாளர் சங்கம், யாழ்ப்பாணம்), சின்னத்தம்பி சங்கரலிங்கம் (கொட்டடி, யாழ்ப்பாணம்).

★ கந்தசாமி சுபாஸ்கரன் (கோவை இல. பி. 405) சாட்சி — றேவதி (மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை மேற்கு).

★ இம்மானுவேல் மரியடயசீலி (கோவை இல.பி.29) சாட்சி — கோபாலசிங்கம் ஜீவபாலன் (பலாலிவீதி), கோண்டாவில் கிழக்கு).

★ அல்போன்சு மில்ரன் (கோவை இல. பி. 78) சாட்சி — தேவசகாயம் செல்வநாயகம் (விதானையார் வீதி, சுண்டுக்குளி). (ம-6)

# பஞ்சபுராணம் ஓதுதல் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 4

முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 16 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம், மாணவர்களிடையே பஞ்சபுராணம் ஓதுதல், பேச்சுப்போட்டிஆகியவற்றை நடத்தவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் முதலாம் பிரிவில் தரம் 6, 7 மாணவர்களும், இரண்டாம் பிரிவில் தரம் 8, 9 மாணவர்களும், மூன்றாம் பிரிவில் தரம் 10, 11 மாணவர்களும் பங்குபற்றலாம்.

போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (ம-7)

# வடமராட்சி தெற்கு, மேற்குப் பகுதியில் இருபது அபிவிருத்தித் திட்டங்கள்

தென்மராட்சி, ஜூலை 4

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்த ஆண்டு 20 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள இவ் வருடத்திற்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 23 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெருமளவு நிதி இப் பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:-

★ அந்திரான் சந்திரோதயம் சனசமூக நிலைய கட்டட புனர் நிர்மாண வேலைகளுக்கு — ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ கலட்டி ஐக்கிய பாலர் பாடசாலை கட்டட புனர் நிர்மாண வேலைக்கு — ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய கட்டட புனரமைப்பு வேலைக்கு — இரண்டு இலட்சம் ரூபா.

★ கரணவாய் தெற்கு கிருஷ்ணா சனசமூக நிலையத்திற்குத் தளபாடங்கள், தட்டச்சு இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு — ஒரு இலட்சம் ரூபா.

★ நெல்லியடி திருஇருதய சனசமூக நிலையக் கட்டடம் அமைத்தலுக்கு — இரண்டு இலட்சம் ரூபா.

★ கரவெட்டி கிழக்கு நாமகள் சனசமூக நிலையத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி, டெக் கொள்வனவு செய்வதற்கு — 75 ஆயிரம் ரூபா.

★ கல்லுவம் கலைநேசன் சனசமூக நிலையப் பாலர் பாடசாலைக்குத் தளபாடம் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு — 75 ஆயிரம் ரூபா.

★ நெல்லியடி சுடரொளி சனசமூக நிலையப் பாலர் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு — 50 ஆயிரம் ரூபா.

★ அல்வாய் வட்டுவத்தை சனசமூக நிலையத்திற்குக் கதவு, ஜன்னல் கொள்வனவு செய்வதற்கு — 50 ஆயிரம் ரூபா.

★ நாவலடி நாவலர் சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு — ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ கரவெட்டி தெற்கு அம்பிகை சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு — ஒரு லட்சம் ரூபா.

கம்பர்மலை கலைவாணி சனசமூக நிலையப் பாலர் பாடசாலைக்கு கட்டடம் அமைக்கவும் தளபாடம் கொள்வனவு செய்யவும் — ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ உடுப்பிட்டிப் பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யுவதிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கு தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்து வழங்க — இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ உடுப்பிட்டி நாற்சதுர சுவிஷேசக சபைக் கட்டடத்திற்கு மின்சார உககரணங்கள் மற்றும் வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்வதற்கு — ஒரு இலட்சம் ரூபா.

★ கரணவாய் தெற்கு வள்ளுவர் சனசமூக நிலையத்திற்குத் தளபாடங்கள், புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கு — 75 ஆயிரம் ரூபா.

★ துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய கட்டடத்திற்கு கூரைத்தகடுகள் கொள்வனவு செய்வதற்கு — ஒருலட்சம் ரூபா.

★ வல்வெட்டித்துறை சமரபாகு பராசக்தி சனசமூக நிலைய கட்டட சீரமைப்பு வேலைக்கு — 50 ஆயிரம் ரூபா.

★ கரணவாய் தெற்கு சோளங்கன் சனசமூக நிலையத்திற்கு நீர்வசதி வழங்க— 50 ஆயிரம் ரூபா.

★ கரவெட்டிகிழக்கு வளர்மதி சனசமூக நிலைய கட்டடம் சீரமைக்க — ஒருலட்சம் ரூபா.

★ ஆதிகோவிலடி ஆதிசக்தி சனசமூக நிலையத்திற்கு கட்டடம் அமைப்பதற்கு — ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. (ம-117)

# கிரனேட் தாக்குதலில் குடும்பஸ்தர் காயம்

## மட்டக்களப்பில் ஞாயிறன்று சம்பவம்

மட்டக்களப்பு, ஜூலை 4

மட்டக்களப்புக் கல்லடியில் உள்ள வீடொன்றின் மீது கடந்த ஞாயிறன்று இரவு இனந்தெரியாதோர் மேற்கொண்ட கிரனேட் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

வீட்டு உரிமையாளரான சிற்றம்பலம் பாஸ்கரன் (வயது 40) என்ற நபரே காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவேளை இனந்தெரியாதோர் சிலர் வந்து வீட்டுக் கதவைத் தட்டியதாகவும்—

கதவைத் திறந்த பொழுது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் இடம்பெற்றிருக்கும் இந்தச் சம்பவத்தை அடுத்து மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுவதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-4)

# மூன்றுபாடசாலைகள் இணைந்துநடத்திய மணிவாசகர் குருபூசைத் தினம் கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம, ஜூலை 4

மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்கும் வகையில் கந்தர்மடம் சைவப்பிரகாசவித்தியாலயம், பூம்புகார் அ. த. க. பாடசாலை, அரியாலை கிழக்கு அ. த. க பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளும் ஒன்றிணைந்து முன்மாதிரியாக நடத்திய மாணிக்கவாசகர் சுவாமிகளின் குருபூசைத் தினத்தையொட்டிய கட்டுரைப்போட்டி முடிவுகள்வெளியாகி உள்ளன.

முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர், பாடசாலை விவரங்கள் முறையே வருமாறு:-

மு. விக்னேஸ்வரி (பூம்புகார் அ. த. க. பாடசாலை), சு. நிர்மலா (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), ம.சுபாசினி கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்),

ஆறுதற் பரிசு பெறுவோர் விவரம் வருமாறு:-

த. சுரேந்தர் பூம்புகார் அ. த. க. பாடசாலை) ந. அனுலா (கந்தர்மடம் சைவப் பிரசாச வித்தியாசாலை), த.தேவிகா அரியாலை கிழக்கு அ. த. க. பாடசாலை), பூ. லோகினி (பூம்புகார் அ. த. க. பாடசாலை, த. தவரூபன் அரியாலை கிழக்கு அ. த. க. பாடசாலை),

கு. நிரஞ்சனா(கந்தர்மடம் சைவயபிரகாச வித்தியாசாலை), கு. லக்ஷாயினி கந்தர்மடம் சைவப்பிரகாசா வித்தியாசாலை), க. கயன்ராஜ் பூம்புகார் அ. த. க. பாடசாலை), த. தயாரூபன் (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை). மை.மோகனன்கந்தர்மடம்சைவப்பிரகாசாவித்தியாசாலை). (ம-7)

# கொக்குவிலில் திருட்டு

கோண்டாவில், ஜூலை 4

வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது வீட்டினுள் நுழைந்த திருடர்கள் சுமார் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி, டெக் மற்றும் சார்ஜர் போன்ற பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கொக்குவில் கிழக்கு தலையாளி என்னும் இடத்தில் இத்திருட்டு இடம்பெற்றது.

யாழ். மாநகரசபை முதல்வரின் செயலாளரான சா. பூலோகநாதன் என்பவரின் வீட்டிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

வீட்டு யன்னல் கம்பிகள் இரண்டை உடைத்து உள்ளிறங்கிய திருடர்கள் வாசல் கதவுகளை உள்ளிருந்து திறந்து பொருள்களுடன் வெளியேறியுள்ளனர்.

இது பற்றிப்பொலீஸ், இராணுவம் ஆகியவற்றிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)


# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 – 02 – 1956

உதிர்வு 02 – 07 – 1993

## திருமதி சி. இந்துமதி

திதி: 04 - 07 - 2001

கருவுற்ற நாள்முதலாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற் றன்னுள்ளமும் நானும் கிடந்தலந்
தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒரு பற்றிலாமையும் கண்டிரங்காய்
கச்சியேகம்பனே.

என்றும் எம் நெஞ்சை விட்டகலா உன் நினைவுகளால் ஏங்கித்தவிக்கின்றோம்; எங்கள் அன்புச் செல்வம் இந்துவே!

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அம்மா, அக்காமார்,
அத்தான்மார், பெறாமகன்.

சுதுமலை மேற்கு,
மானிப்பாய். (89683)

உதயன்

## பொறுத்திருப்போம்!

நாடாளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அணியின் ஆதரவை இழந்ததால், பெரும்பான்மையைக் கோட்டைவிட்டுவிட்டதாகக் கருதப்படும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு, நாளை மறுதினம் முதலாவது 'அஸிட்' சோதனையை எதிர்கொள்ளப்போகின்றது.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதமும் அதைத் தொடர்ந்து வாக்கெடுப்பும் நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் இடம்பெறும்போதே முதலாவது நெருக்கடியைப் இந்த அரசு சந்திக்கும்.

அவசரகாலச்சட்ட விவாதத்தில் தமது எம்.பிக்கள் எப்படிச் செயற்படுவார்கள் என்பது குறித்து எதிரணிக் கட்சிகள் ஒவ்வொன்றும் தமக்குள்ளேயே முரணான சமிக்ஞைகளை மாறிமாறி வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தேசியம் பேசும் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் ஒடுக்குவதற்கு அவசரகாலச் சட்டத்தைக் காலாவதியாகவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று பிரசாரம் செய்து, பெரும்பான்மை மக்கள் மத்தியில் சிங்களத் தேசிய - இன - வாதத்தைத் தூண்டி, அதன் மூலம் சிங்கள - முஸ்லிம் எதிரணிக் கட்சிகளை உடைத்து, அவற்றின் ஆதரவை அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவாகப் பெற்று, அந்தப் பிரேரணையை வெற்றிபெறச் செய்துவிடலாம் என்று திட்டமிட்டுச் செயற்படுகின்றது அரசுத் தரப்பு.

அவசரகாலச்சட்டத்தை இம்முறை ஜே.வி.பி. எதிர்த்து வாக்களிக்கும் என்று அதன் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவனச கூறுகின்றார். ஆனால் அக்கட்சியின் ஏனைய தலைவர்கள் மாறுபாடான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். எனினும் அது எதிர்த்து வாக்களிக்கும் என்பது ஓரளவு உறுதி.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோ ஊசல் ஆடுவதுபோல மாறி மாறிக் கூறிவந்த தனது கருத்தை, இப்போது மாற்றி, இறுதி நேரத்தில் முடிவு என அறிவித்துள்ளது.

பிரேரணையை ஐ.தே.கட்சி எதிர்த்து வாக்களிக்கும் என்றும் - ஐ.தே.கட்சியின் எம்.பிக்களை அன்று நாடாளுமன்றுக்குக் கூட்டி வந்து பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க வைப்பது தமது கட்சியில் உள்ள தமிழ் எம்.பிக்களின் பொறுப்பு என்றும் ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான மகேஸ்வரன் அறிவித்துவிட்டார்.

வழமையான அரசியல் லாபத்துக்காக அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துப் பேசும் - வாக்களிக்கும்- தமிழ்க்கட்சிகள் இம்முறை என்ன செய்யப்போகின்றன?

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராகக் கடந்த மூன்று தடவைகள் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி வாக்களித்துவிட்டது. ஆனால் ஐ.தே.க. பட்டியலில் எம்.பியாக இருக்கும் - தன்னைத் தமிழரின் நலன்பேணும் தலைவராகக் காட்டிக்கொள்ளும் - சந்திரசேகரன் எம்.பி. இந்த மூன்று முறைகளில் ஒரு தடவை கூட அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவில்லை.

இதேபோன்று, இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவசரகாலச் சட்ட நீடிப்பு வாக்கெடுப்பில் அரசைக் கவிழ்ப்பதற்கு ஐ.தே.க. திட்டம் தீட்டி, அரசுத் தரப்பிலிருந்தும் ஓரிரு எம்.பிக்களை வளைத்துப்போட்டு, மட்டுமட்டாக எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்தித் தயாரானபோது கூட்டணி எம்.பி. ஒருவர் திடீரென சபையில் காணாமல் போனார்.

அவரை அரசுத் தரப்பு அமைச்சர் ஒருவர் 'கஊளை'யாகக் கவனித்து கடைசி நேரத்தில் இந்தியாவுக்கு அனுப்பி, கவிழும் ஆபத்திலிருந்து அரசைக் காப்பாற்றினார் என்ற தகவல் பின்னர் கசிந்தது.

இப்போதும் அரசு கவிழும் ஆபத்து சூழ்ந்து வருகின்றது. அதை முறியடிக்க எத்தனை லகரங்களையும் சுளையாகத் தூக்கி வீச அரசுத் தரப்பில் ஆள்கள் தயாராக இருப்பர்.

அந்த வலையில் தமது எம்.பிக்கள் வீழாமல் இருப்பதை தமிழ்க் கட்சிகளின் - குறிப்பாக ரெலோ, கூட்டணி போன்ற கட்சிகளின் - தலைவர்கள் உறுதிப்படுத்துவார்களா? அல்லது விலைபோன பின்னர், வழமைபோல சம்பந்தப்பட்ட எம்.பி. சபைக்கு வராததற்கு நொண்டிச் சாட்டுகளைக் கூறுவார்களா? பொறுத்திருந்துதான் பார்ப்போமே!

கடந்த ஒருவருட காலத்தில்

# கட்டடப் பொருள் கொள்வனவு குடாநாட்டில் திடீர் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை4

கடந்த ஒரு வருட காலத்தில் யாழ்மாவட்டத்தில் கட்டடப் பொருள்களை மக்கள் கொள்வனவு செய்வதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

2000ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட யுத்த நிலையைத் தொடர்ந்து வீடுகள் மற்றும் கட்டடங்கள் அமைப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

திணைக்களக் கட்டட வேலைகளுக்கு மட்டுமே கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்திடமிருந்து பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகவும் -

மாதம் ஒன்றுக்கு ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவுக்கு மேல் பொருள்களை விற்பனை செய்துவந்த கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம் தற்பொழுது ஒரு மாதத்தில் 50 லட்சம் ரூபாவுக்கும் பொருள்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் கூறினார். (ம-5)

## கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றப்படுகிறது

மந்திகையிலுள்ள பருத்திதுறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் கால்நடை அம்மை நோய்க்கான தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

மாதாந்தோறும் இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் இத்தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

அடுத்துவரும் மாதங்களில் கால்நடைகளுக்கு அம்மைநோய் ஏற்படும் அறிகுறிகள் தென் படுவதால் கால்நடைகளைக் குறிப்பாக கோழிகளை வளர்ப்போர் அம்மை தடுப்பூசி மருந்தினை ஏற்றிக்கொள்ளுமாறு பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் சி.வசீகரன் தெரிவித்துள்ளார். (ம-173)

## வணிகர் மன்ற கூட்டம்

தென்மராட்சி,ஜூலை4

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற நிர்வாக சபைக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

## நாட்டு நடப்பு

### ரியூட்டறி - VI

ஒரு நூறு சைக்கிள் ஒன்றாய்
ஓரமாய் நிற்கும் றோட்டில்
குரு ஒரு "சீ நைன்ரி" ஏறி
சீறிக் கொண்டங்கு வந்தார்
'எடு எடு! கொப்பி' என்றார்
'எழுதுங்கள் உடனே!' என்றார்
கட கடவென எழுதித் தள்ள
கட்டாயம் வரும் இக்கேள்வி என்றார்
கடைசியில் வந்த கேள்வி
கண்டு கேட்டறியா கேள்வி

*- விகடகவி -*

நெருக்கடியில் இருந்து அரசை மீட்க

# அமைச்சரவையில் ஹக்கீமை மீண்டும் சேர்க்க வேண்டும்

## அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே கூறுகிறார்

கொழும்பு,ஜூலை4

ரவூப் ஹக்கீம் அமைச்சர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டதை அடுத்து அரசு ஆட்டம் காணும் நிலையில் உள்ளது. இந்த நெருக்கடி நிலையில் இருந்து அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டுமாயின் ரவூப் ஹக்கீம் மீண்டும் அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் விமானப் போக்குவரத்து, விமான நிலைய அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே.

நீர்கொழும்பில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நான் எந்தச் சூழ்நிலையிலும் உண்மை நிலையை மறைக்க விரும்பவில்லை. ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு முன்னர் ஜனாதிபதி இன்னும் ஆழமாகச் சிந்தித்திருக்க வேண்டும்.

இது விடயமாக அமைச்சரவையுடனும் ஆலோசனை நடத்தியிருக்கலாம் என்பதே எனது அபிப்பிராயமாகும். ரவூப் ஹக்கீம் வெளியேற்றப்பட்டது தவறானது என்பதே எனது கருத்தாகும்.

ஹக்கீம் வெளியேற்றப்பட்டதன் பின்னர் அரசு பெரும் நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. இதனை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அவர் வெளியேற்றப்பட்டமை சரியான நடவடிக்கை என்று மகிழ்ச்சி தெரிவிக்கும் எவரும் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெறவில்லை.

ஹக்கீம் வெளியேற்றப்பட்டதன் மூலம் அரசு பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது.

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசு வெற்றி காண வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும். ஆனால், அது சாத்தியப்படுமா என்ற அச்சம் ஹக்கீம் அணியினர் வெளியேறியதன் மூலம் ஏற்பட்டுள்ளது.

ஹக்கீமுடன் பேசி மீண்டும் முஸ்லிம் காங்கிரஸை அரசுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். இதனை நான் ஜனாதிபதியிடம் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின் போதும் வலியுறுத்தவிருக்கின்றேன்- என்று அமைச்சர் தெரிவித்தார்.(ம-7)

## விசேட அ.அட்டையைப் பெறக் கோரிக்கை

மானிப்பாய், சுதுமலை தெற்கைச் சேர்ந்த பாக்கியநாதன் ஜெயராணி என்பவருடைய விசேட அடையாள அட்டை (0905010163) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் உள்ளது.

உரியவர் நேரில் வந்து அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.(ம-10)

## வேய் அனைய தோளி! பாய் அருளை வீசு!

சீத மதி சூடும் ஆதி சிவனாரின்
சிந்தை தனில்வாழும் எந்தாயே!
செந்தளிரின் பாதம் கந்தமனை மேனி
சேர்ந்தொளி யிலேறி ஆர்கின்றாய்
வீதி தனில்தேரில் நாதமணி ஓசை
மேலெழவே சால அருளார
மேதினியின் மீதே தீதகல நீயும்
வேண்டியெமை ஆண்டே அருள்வாயே
சோதி மிகுவேலன் தாதை மிகு காதல்
சேர உனையார அணைவானே
சுத்தன் அவன்பாகம் நித்தம் இருந்தே நீ
சுகத்தை அவனகத் தருள்வாயே
காதல் மிகநாக பூஷணியுன் மீதாகிக்
கண்கள் விழிநீரை மண்மீதே
கால மழைபோலச் சால விழநின்றோம்
தாய்எமக் கிரகங்கா திருப்பாயோ?

*- சொக்கன்.*

# நீர்வேலி 'பங்கரி'லிருந்து தண்ணீர் அகற்றப்படுகின்றது

கோண்டாவில்,ஜூலை4

நீர்வேலியில் அமைந்துள்ள பாரிய பதுங்கு குழியில் தேங்கி நிற்கும் தண்ணீரை இராணுவத்தினர் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் வெளியேற்றி வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்.குடாநாடு இருக்கும் போது நிர்மாணிக்கப்பட்ட இப்பதுங்கு குழியில் பாரிய குண்டுகள் இருப்பதாகக் கூறியே அதிலுள்ள தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருவதாக அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஊரில் உள்ள பொதுமக்களின் நீர் இறைக்கும் இயந்திரங்கள் இராணுவத்தால் பெறப்பட்டு இந்நடவடிக்கை கடந்த ஒரு வாரகாலமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (ம-86)

# அரச சேவையிலுள்ள ஆண்களுக்கும் ஐந்து நாள் பிரசவ லீவு வழங்கப்படும்

## மகளிர் விவகார அமைச்சு செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை4

அரச சேவையில் உள்ள ஆண்களுக்கும் ஐந்து நாள் பிரசவ லீவு வழங்கப்படவுள்ளது.

பிரசவம் முடிந்து அடுத்த சில நாள்களுக்குள் தாய்மாருக்கு பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் ஆண்களுக்கும் பிரசவ லீவு வழங்கப்படவுள்ளதாக மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.டி.சுமனசேகர தெரிவித்துள்ளார்.

மகளிர் விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன இந்த விவகாரம் குறித்து விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்றும் -

அதன் பின்னர் இது தொடர்பான அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும் என்றும் -

அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-7)

## நாளை

ஆனி 21
வியாழக்கிழமை
திதி: பூரணை
முன் இரவு 8.50 வரை.
நட்சத்திரம் : மூலம்
முற்பகல் 8.46 வரை.
பூரணை விரதம்
சுபநேரம் : 7.27 - 8.57
ராகுகாலம் : 1.27 - 2.57
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக் கொள்கிறது.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



பற்றைக்குள் கிடந்த பச்சை டப்பாவை
விளையாட்டுப் பொருளென்று நினைத்து
காற்சட்டைப் பைக்குள் எடுத்து வைத்து
பள்ளிக்குக் கொண்டு சென்று சிறுபாலகர்
சேர்ந்து அதைத் திறக்க, நேர்ந்தது பயங்கரம்
அந்தோ! ஊரெங்கும் மரண ஓலம்!

## வாராந்த நிகழ்வு

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'சும்மா இரு' என்னும் தலைப்பில் யாழ்.தேசிய சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் சிவ. தட்சணாமூர்த்தி சொற்பொழிவாற்றுவார். (ம-173)

## நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு

# இரு பிரதியமைச்சர்கள் உட்பட நான்கு அரச எம்.பிக்கள் ஆதரவு

## ஐ.தே.கட்சியின் முயற்சியின் பயன்

அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பொ.ஐ.முன்னணியின் பிரதியமைச்சர்கள் இருவர் உட்பட, 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.கட்சியின் பிரமுகர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பயனாகவே இந்த 4 நாடாளுமன்ற உறுப்பினர்களும், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (ம-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 04 - 02 - 1932

விண்ணில் 15 - 06 - 2000

### திருமதி முருகேசு தங்கரெத்தினம்

திதி: 04.07.2001

எமை வாழவைத்த ஒளி விளக்கே!
ஒளியிழந்து ஓராண்டு சென்றாலும்
ஆறாத்துயரோடும் அகலா நினைவோடும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

*வேலணை மேற்கு,*
*வேலணை - 7.*

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(89704)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

05-06-2001 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### பிள்ளையினார் மாணிக்கம்

அவர்களின்

அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (05-07-2001) வியாழக்கிழமை நடைபெற உள்ளன. எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மேற்படி கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மற்றும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு வைத்தியசாலையில் வந்து உதவிபுரிந்தோருக்கும் மரணச்சடங்கில் கலந்தும், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


மா.நாகேந்திரம்,
*அஞ்சலகம்,*
*யாழ்ப்பாணம்.*
'சுகிஸ்தான்'
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*

- மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

(89711)

உள்ளத்தை நெகிழவைக்கும்

## ஓராண்டு நினைவலைகள்



மண்ணில் மலர்வு 14 - 04 - 1914

விண்ணில் உறைவு 15 - 06 - 2000

### திருமதி நாகமுத்து சிதம்பரப்பிள்ளை

திதி: 04-07-2001

"நிலையில்லா இவ்வுலக வாழ்வை நம்பி
நிறைவு பெற்று வாழுகிறார் மாந்தரெல்லாம்
கதி கலங்கி மதி மயங்கித் தவித்து நிற்க
காலனுமைக் கவர்ந்து சென்ற மர்மமென்னவோ?
எங்கள் அம்மா! உன் பிரிவால் மைந்தரெல்லாம்
எப்பிறப்பில் காண்போமென் றேங்குகின்றார்?
கண்கண்ட தெய்வம் போற் காத்து நின்றீர்!
கணப் பொழுதில் எமை மறந்து சென்றுவிட்டீர்?
பொறுமை தனில் சிகரமாய்ப் பொலிந்தாயம்மா!
பொன் போன்ற வார்த்தைதனை எப்போ கேட்போம்?
அன்னையெனும் இலட்சணங்கள் அனைத்தும் தாங்கி
அகிலமதில் ஒளி விளக்காய்த் திகழ்ந்தாயென்றும்
ஓராண்டு மறைந்ததென்று எண்ணும்போது
உள்ளமதை ஏற்காது உருகுதையோ....!
இறைபக்தி நிறைந்த உங்கள் இதயவீணை
எம்செவியில் எக்கணமும் ஒலிக்குதம்மா!
சிறப்பாக மக்களையே வாழவைத்து
சிவன் கழலே கதியென்று சேர்ந்துவிட்டீர்"

*தகவல்:* திருமதி இ.சபாரெத்தினம் (மகள்)

*மந்துவில்,*
*கொடிகாமம்.*

(89545)

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பரிசளிப்பும் நூல் வெளியீடும்

வலி.தென்மேற்கு,ஜுலை4

மானிப்பாய் - மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 165ஆவது ஆண்டு நிறைவையொட்டி பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

மானிப்பாய் மெமோறியல் திறந்த வெளியரங்கில் கல்லூரி அதிபர் அ.மு.அருணாசலம் தலைமையில் இடம்பெறும் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் விசேட விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலும்மயிலும் குகேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன், சண்டிலிப்பாய் உதவிக்கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம், வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

தொடர்ந்து 'மெமோறியல் மலர்-06' நூல் வெளியீட்டு விழா இடம்பெறும். இதில் பிரதமவிருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை கலந்துகொள்வார்.

வெளியீட்டுரையை ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் கோ.சி.வேலாயுதமும் ஆய்வுரையை வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் ஆற்றவுள்ளனர். (மு-185)

## சிவமகாராசாவுக்கு பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

வலி.வடக்கு,ஜுலை4

தமிழர்விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டுறவாளருமான சி.சிவமகாராசாவுக்குத் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் "பரோபகாரச் செம்மல்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ச.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற சேவைநலன் பாராட்டு விழாவில் வைத்து இப்பட்டம் வழங்கப்பட்டது. (ம-86)

## சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டெழுத்தாளர் விவரம் பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை4

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் தட்டெழுத்தாளர்களின் நலன் கருதி, அவர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கை நடத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்காக, சம்பந்தப்பட்ட சுருக்கெழுத்தாளர்களும் தட்டெழுத்தாளர்களும் தங்கள் பெயர், பதவி, கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் - வலிகாமம் அல்லது வடமராட்சி - இடம் ஆகியவற்றைத் தத்தமது அலுவலகத் தலைவர்களூடாக 'வடக்கு - கிழக்கு மாகாண சபைப் பிராந்திய ஆணையாளர், 48, காட்டிக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்புமாறு பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார். (ஓ)



உ
குகமயம்

## நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி கோயில்

### பாராட்டும் பட்டமளிப்பும்

மேற்படி ஆலய மஹோற்சவ காலத்தில் தெய்வீகப் பேருரையாற்றிச் சிறப்பித்த

**திரு.ச.லலீசன் B.A. (Hons) அவர்கள்**

(ஆசிரியர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்)

"சிவத்தமிழ்ச் சொல்லழகர்"

என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்.

*தலைவர்:* 'சிவத்தமிழ் வித்தகர்' திரு.சிவ.மகாலிங்கம்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை)

*காலம்:* நாளை (05-07-2001) வியாழக்கிழமை மாலை 6 மணி

*இடம்:* மேற்படி ஆலய மண்டபம்

*பாராட்டும் பட்டம் வழங்கலும்:*
'நீர்வைமணி' சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள்
(மேற்படி ஆலயப் பிரதம குரு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(89692) - விழாச் சபையினர்.

## கௌரவிப்பு விழா அழைப்பு





வலி.தெற்கு பிரதேச சபையின் புதிய தலைவர்

### உயர்திரு.கே.கமலசேகரன் JPUM

அவர்களைக்

### கௌரவிக்கும் பெருவிழா

*இடம்:* சுன்னாகம் பேருந்து நிலைய முன்றல்

*தலைவர்:* லயன் டாக்டர் ந.கிருஷ்ணராசா

*காலம்:* இன்று (04.07.2001) புதன்கிழமை பி.ப. 2.30மணி (இ.நே.)

☆ சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்திலிருந்து மங்கள வாத்திய இசையுடன் விழா நாயகரை மக்கள் ஊர்வலமாக மேடைக்கு அழைத்து வருவார்கள்.

☆ கலை - கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- வலி.தெற்கு பிரதேச மக்கள் சார்பில் விழாக்குழுவினர்.

சுன்னாகம். (C/17287)

## நெஞ்சகலா ஓராண்டு நினைவுகள்

சூடுகிறோம் தங்களுக்கு ஏற்றிடுங்கள்



அன்னை மடியில் 01 - 11 - 1939

ஆண்டவன் அடியில் 04 - 07 - 2000

### செல்வி சரஸ்வதி கந்தையா (யோகம் ரீச்சர்)

(B.Sc. Home Science - இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வர மகாவித்தியாலயம்)

திதி : பூர்வபக்கத் திருதியை

என்றென்றும் எம் நினைவில்
நிறைந்திருக்கும் அன்புச் சகோதரியே!
இங்கு நாம் ஆறாத்துயருடன்.....
நீங்கள் தெய்வீக ஒளியுடன்
ஒன்றித்த ஓராண்டு பூர்த்தியாகும்
இத்தினத்தில், என்றும் உங்கள்
ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

(89688)

உங்கள் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

# தேவர் கோன் பூஜித்த மணிபல்லவ நாயகி

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திரு விழா இன்று நடைபெறுகிறது. அதனை ஒட்டி நயினை அம்மனின் வரலாறு கூறும் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

அகிலாண்ட கோடியீன்று; அவை உய்யும பொருட்டு முப்பத்து இரண்டு அறங்களையும் ஸ்தாபித்தவள் அன்னை பராசக்தி. அளவிடற்கரிய அவளது ஆற்றல் ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டு சிறப்பாக வெளிப்படும் இடங்கள் 'சக்தி பீடங்கள்' எனப் போற்றப்படுகின்றன.

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில மணிபல்லவத்தில் புவனேஸ்வரி பீடம் ஒன்றென்பது ஆன்றோர் முடிபு.

மணிபல்லவம் எது என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து முரன்பாடுகள் காணப்படுகின்றன. முதலியார் இராசநாயகம், டானியல் யோன், கலாநிதி பரண விதான போன்ற அறிஞர்கள் தற்போது நயினாதீவு என அழைக்கப்படும் சிறு தீவே, புராதன காலத்தில் மணிபல்லவம், நாகதீபம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளனர்.

"ஒரு சிறு தீவு காவிரிப்பூம் பட்டிணத்தில் இருந்து தெற்கே முப்பது யோசனை தொலைவில் உள்ளது. அங்கே தன்னைத் தரிசித்தவர்களுக்குப் பழம் பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் தர்ம பீடிகை ஒன்றும், கோமுகி என்னும் பொய்கையும் இருந்தன" என்று கலைக் களஞ்சியத் தொகுதி 8 குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழில் தோன்றிய ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையின் காப்பிய நாயகியான மணிமேகலை மணிபல்லவத்தீவின் தர்ம பீடியைத் தரிசித்து தனது பழம் பிறப்பினை உணர்ந்ததாக அக்காப்பியத்தில் இருந்து அறியமுடிகிறது.

மேலும் இவ்வாசனம் தேவர் கோனான இந்திரனாலே ஆக்கப்பட்டதே என்பதை "தேவர் கோன் இட்டம்மணிப் பீடிகை பிறப்பு விளங்கு அவிரொளி அறந்தகையாசனம் " (மணிபல்லவத்து துயருற்ற காதை 6,50-51) என்னும் வரிகள் வாயிலாக அறியமுடிகிறது.

குலோதர, மகோதர என்னும் இரு



நாக அரசர்களிடையே ஒரு மெனிக் புட்டுவவுக்காக (மணி ஆசனம்) ஏற்பட்ட பிணக்கினைத் தர்பபதற்காக புத்தர் நாகதீபவில் கால் பதித்ததாக பௌத்த நூல் ஒன்று கூறுகின்றது.

"பெரியவன் தோன்றா முன்னம் இப்பீடிகை கரியவன் இட்ட காரணம் தானும்"

ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை 8, 53-54 பெரியவன் - புத்தர்; கரியவன் - இந்திரன்.

மேற்படி வரிகளில் இருந்தும் சித்தாத்தர் (புத்தர்) பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இந்திரனால் மணிஆசனம் நயினாதீவில் ஸ்தாபிக்கப்பட்டதென்பதனை அறிய முடிகிறது.

தேவர் கோன் ஆகிய இந்திரன் இம்மணிப்பீடத்தினை ஏன் மணிபல்லவம் என அழைக்கப்பட்ட நயினாதீவில் ஸ்தாபித்தான் என்பதற்கு ஆபுத்திரன் வரலாறு விடை பகர்கிறது.

அம்பிகையின் அருளாலே ஆபுத்திரன் என்பான், எடுக்க எடுக்க குறையாது அன்னம் சுரக்கும் அச்சய பாத்திரம் பெறுகின்றான், அப்பாத்திரத்தின உதவியுடன் பசித்தோர்க்கு இல்லையெனாது அன்னம் வழங்குகிறான். இதனால் அவனது அறம் தழைத்தோங்க இந்திரப் பதவியினைப் பெறுகின்ற தகுதியுடையவன் ஆகின்றான்.

தனது பதவி பறிபோய்விடுமோ என வெகுண்ட இந்திரன், பன்னிரண்டு வருடங்கள் மழை இன்றி பசியும் பட்டினியுமாய் துன்புற்ற பாண்டிய நாடெங்கும் மழையைப் பொழிவிக்கின்றான். மழையினால் பாண்டிய நாடு வழம்பெற இரப்போர் இல்லாதொழிகின்றனர்.

ஆபுத்திரனது தருமம் தடைப்பட மனம் வருந்திய அவன் சாவக நாட்டிலே மழையில்லாமல் மக்கள் பஞ்சத்தில் துயருறுவதை அறிகிறான். மரக்கலம் ஏறி சாவக நாடு பயணமாகிறான். இதை அறிந்த இந்திரன் புயற்காற்றினை ஏவி ஆபுத்திரன் சென்ற மரக்கலத்தினைக் கடலிலே கவிழ்த்து விடுகிறான். அமுது சுரக்கும் அச்சய பாத்திரத்துடன் மனித சஞ்சரமற்ற மணிபல்லவத் தீவினை அடைகிறான் ஆபுத்திரன்.

அம்பிகை தனக்களித்த அந்த அச்சய பாத்திரத்தினால் ஒருபயனும் அற்றுப் போய்விட்டதை எண்ணி மனம் வருந்துகின்றான். கோமுகிப் பொய்கையிலே அட்சய பாத்திரத்தை விட்டு அங்கேயே உயிர்துறக்கிறான்.

ஆபுத்திரன் இறந்த செய்தி அறிந்த தேவர்கோன் பயப்படுகிறான். அம்பிகையின் கடாட்சம் பெற்ற ஆபுத்திரனின் மரணத்திற்கு தான் காரணமாக இருந்து விட்டேனே; அம்பிகையின் கோபத்திற்கு ஆளாகி பிரமசக்தி தோஷம் தன்னைப் பிடிக்கப்போகின்றதே என்று நடுங்குகின்றான்.

**மு.கா.நடராசா**

பாவவிமோசனம் பெறும் பொருட்டு ஆபுத்திரன் இறந்த மணிபல்லவத் தீவிற்கு வருகிறான் இந்திரன். விலைமதிப்பற்ற மாணிக்கங்கள் பதித்து ஓர் அரியாசனத்தினை ஸ்தாபித்து அதிலே அம்பிகையை ஆவாகனம் செய்து பூசிக்கின்றான். பாவ விமோசனம் பெறுகிறான் இந்திரன்.

ஆபுத்திரனால் கோமுகிப் பொய்கையில் விடப்பட்ட அட்சய பாத்திரம் திரும்ப மணிமேகலையின் கையில் கிடைத்ததாக மணிமேகலை காப்பியத்தில் இருந்து அறிகின்றோம். ☆

# "பொற்புறு நாகபூஷணியின் அற்புதத் திருவிளையாட்டு"

01.07.2001 ஞாயிற்றுக்கிழமை, நயினை நாகபூஷணி அம்மனின் 11ஆம் திருவிழா நடந்தேறியது. இத் திருவிழாவின் உபயகாரர் - நயினை அரச ஊழியர்களாவர். இத்திருவிழாவன்று மூலஸ்தானத்தில் உள்ள 5 தலைநாக உருவான சிறிய சர்ப்பத்தையும் அன்னையின் எழுந்தருளி விக்கிரகத்துடன் ஒன்றாக எழுந்தருளச் செய்வது வழக்கம். இதன் மூலம் கடற்கொந்தளிப்பும் காற்றின் வேகமும் குறைந்து பயணம் அமைதியாக நடைபெறுவது இயல்பு.

அத்துடன் அன்றைய நாளில் ஆலயத்தில் வடகிழக்கில் உள்ள கடலில இருக்கும் நாகக் கல், கெருடன்கல் என்பவற்றைப் பூசித்துப் புத்துணர்வு பெறுவதும் வழக்கமாகிவிட்டது. இதன் மூலம் அடியவர்கள் ஆலயத் தொன்மையை உணரவும்; அன்னையின் அருட்பிரபாகத்தைப் பெறவும் வழி செய்யப்பட்டுள்ளது.

வழமைபோல் 01.07.2001 ஞாயிறு, பகல் 11.45 மணிக்கு மேற்படி பூசை அதற்கென அமைக்கப்பட்டிருந்த புதிய மண்டபத்தில் ஆரம்பமாகி நடந்தது. நண்பகல் 12 மணிக்கு சிவஸ்ரீ முத்துக்குமாரசாமிக் குருக்கள் பஞ்சாலாத்தி தீபம் காட்டிய போது திடீரென வான் வெளிப்பரப்பில் நுழைந்த இரண்டு கெருடன்கள் - பாம்புக் கல்லுக்கும், கெருடன் கல்லுக்கும் மேலாக வட்டமிட்டு பூசை முடியும் மட்டும் எல்லோரையும் ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்தின. அங்கு கூடியிருந்த அறங்காவலர்களும், அடியார்களும், உபயகாரர்களும், மெய்யரும்பி விதிர்விதிர்த்து கை தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம் புளகாங்கிதம் அடைந்தனர். பூசை முடிந்ததும் ஒரு கெருடன், கெருடன் கல்லின் மேல் அமர்ந்து கொண்டது. இந்நிகழ்ச்சி ஆலய வரலாற்றில் ஆவணப்படுத்த வேண்டிய தேவியின் அற்புத பராக்கிரமமாகும், முன்னைப் பரம் பொருட்டும் "முன்னைப்பரம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியுடையவளாய்" அன்னை காட்டிய வரலாற்றை மெய்ப்பிக்கும் அற்புத ஆதாரம், பொற்புறப் பாதுகாக்கப்பட்டு, எதிர்காலத்தில் "எது எமைப் பணி கொழுமாறதும் கேட்டு" எப்பிராட்டியின் சொல்லுக்கடங்காத தொன்மைச் சிறப்புகளைத் திண்மையாக வெளிக்கொணர உதவ வேண்டும்.

*"பாம்பும் கெருடனும் பகைநீங்க அருளி*

*ஓங்கும் கடலில் உருவங்களை இருத்தி,*

*தாங்கும் அடியார் தண்ணளிபைக் காண,*

*நீங்கா மனத்தில் நிலைநிறுத்தி வைத்துப்*

*பாங்காய் பணிய வைத்தநாக பராபரையை*

*ஆங்கார மின்றி அடிபணிந்து தொழுதிடுவோம்"*

~நாக. சண்முகநாதபிள்ளை.

"கர கர மொரு மொரு"
சன்விட்டா பிஸ்கட்டுக்களை
தனிச் சிறப்புடன் சுவைத்து மகிழுங்கள்
தயாரிப்பாளர்கள்:-
வெஸ்ரோரியன்ட் புட்ஸ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு.
சந்தைப்படுத்துவோர்:-
சிவா நறுமணப் பூங்கா
(89645) 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. இல. 2567

## தேர்மிசை வந்து தாங்கிடு அம்மா

-எடுப்பு-

ஆழ்கடல் சூழ்ந்து எழில்பெறு நயினை
இருந்தருள் புரிபவளே!
சூழ்வினை நீங்கித் துயரிலா வாழ்வு
துலங்கிட வைப்பாயே!
(ஆழ்)

- தொடுப்பு -

கோள்களின் தீதும் குறைகளும் பிணியும்
குன்றிடச் செய்பவளே!
நாள்களின் நலிவும் நமன்வீடு துயரும்
நசித்தெமை மீட்பாயே!
(ஆழ்)

- முடிப்பு -

சேயுனை அன்றி வேறொரு தெய்வம்
தேடுவ(து) உண்டோ மண்ணில்!
தாயுன(து) இன்பத் தேர்மிசை வந்து
தாங்கிடு நாக அம்மா!
(ஆழ்)

*- முருகனடியான் -*

## தேச நலன் காக்கத் தேரேறி வருக!

தேரேறி அருள் பொழியும் நயினைப் பதியாளே
தேச நலன் காத்திடம்மா நயினைப் பதியாளே
ஆரோடு நோவோமம்மா நயினைப் பதியாளே
ஆர்க் கெடுத்துரைப் போமம்மா நயினைப் பதியாளே
வேரறுந்து தமிழினம் ஒழிவதா நயினைப் பதியாளே
விடிவு தந்து காத்திடம்மா நயினைப் பதியாளே
போரோய வேண்டுமம்மா நயினைப் பதியாளே
புதுவாழ்வு தந்திடம்மா நயினைப் பதியாளே!

*-மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன் -*

## தரணியெங்கும் தாருமம்மா!

நயினை நகர் நாகம்மாள்
நற்கருணை நாயகியே
அவனியெங்கும் அருள் பொழியும்
அகிலாண்ட சுந்தரியே

அலை கடலின் அசைவினிலே
அம்பிகையின் அருளம்மா
ஆரணியின் ஆலயத்தில்
அடியார்கள் கூட்டமம்மா

படகேறி வருகின்ற
பக்தர் குறை தீருமம்மா
அரவத்தின் அர்ச்சனையால்
அன்னையகம் மகிழுதம்மா

ஆலயத்தின் வரலாற்றில்
ஆழ்கடலே தொடக்கமம்மா
வரலாற்றுச் சிறப்பிற்கே
வடிவமைந்த இரதமம்மா
தேரேறும் தேவிக்கு
தேசமெல்லாம் தெரியுமம்மா
சோதனைகள் நீக்கிடுவாள்
வேதனைகள் போதுமம்மா

அன்னையவள் அருட்பார்வை
அனைவருக்கும் வேண்டுமம்மா
தாயே உன் தயவெல்லாம்
தரணியெங்கும் தாருமம்மா.

*- நயினை தர்சிகா தயாளநேசன் -*
(கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி)

## தாயே எமை ஆளுந் தயாபரியே!


பண் - கொல்லி ராகம்: நவரோஜ் தாளம் - ஆதி

தாயேயெமை யாளுந் தயாபரியே
தலையிதொரு நாக மணிந்தவளே
பேய்போலலைந்தோம் பெருமை யுணரோம்
பிழைகள் பொறுத் தெம்மைநீ யாண்டருளே
மாயாப் பிறவி வலையில் விழுந்து
மண்மீது வினைபல செய்துழன்று
நோயாலழுந்தி தவிப்போர்க் கருள்வாய்
நயினைப் பதியுறை நாக பூஷணியே

அன்னையலை மோதுங் கடல்நடுவே
அசையாது இருந் தெமையாள்பவளே
உன்னைத் துதித்தெம் குறைகள் களைய
இசைபாடியிறைஞ்சி நாம் ஏத்துகின்றோம்
பொன்னைப் பொருளை புகழை விரும்பி
பொழுதைக் கழித்தோம் புலங்கள் பெயர்ந்தோம்
கன்னின் மணியே கருணைக் கடலே
கடல்சூழ் நயினைப் பதிநாயகியே

*- அன்னைதாசன் -*

# நாயுண்ணியைக் கட்டுப்படுத்த புதிய பூஞ்சணக் களைகொல்லி



நாயுண்ணிச் செடி

எமது பிரதேசத்தில் சிவப்பு, மஞ்சள், ஊதா, றோசா, வெள்ளை நிறத்தில் விதவிதமான பூக்களை யுடைய ஓங்கி வளர்ந்திருக்கும் செடிகளை வெற்றுக் காணிகளிலும், கைவிடப்பட்ட வீட்டு நிலங்களிலும் காணக்கூடியதாயிருக்கும். இன்னும் சில இடங்களில் செடியா அல்லது மரமா எனப் பிரமிக்கவைக்கும் அளவிற்கு நிமிர்ந்து விருட்சம் போல வளர்ந்தும் இருக்கிறது. இதனை நம்மவர்கள் 'நாயுண்ணி' செடி என அழைப்பர். இதனது பழங்கள் சரியாக நாயினது உண்ணியைப் போன்று இருப்பதனால் பொருத்தமான பெயராக இடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் 'லன்ரனா காமறா' *(Lantana camara)* என அழைக்கப்படும். சிறிய அளவிலான முட்களைத் தண்டிலே கொண்ட இந்தச் செடி அழகுக்காக எம்மவர்கள் தேடி சேர்த்துக் கொண்ட தலையிடி. அழகுக்கு வந்தது ஆபத்தாகிவிட்டது. இப்போது களையாக மாறிவிட்டது. ஒரு சிலர் இதனது தண்டிலிருந்து கூடை பின்னுகின்றார்கள். இருப்பினும் பிரயோசனம் அதிகளவில் இல்லாத வந்தேறுகுடி இந்தச்செடி. இங்கு மட்டுமல்ல பல்வேறு நாடுகளிலும் இது களையாக இருக்கின்றது. சில நாடுகளில் பருத்தி, நெல், வாழை, அன்னாசிப் பயிர்ச்செய்கையில் நாயுண்ணிச் செடி விவசாயக் களையாகியுள்ளது.

கால்நடைகளுக்கு நச்சுத்தன்மையைக் கொடுக்கக் கூடியது. சிறிது கால இடைவெளி விட்டால் தேடிப்பிடித்து வளர்ந்து விடுகின்ற அளவிற்கு இதனது வித்துக்கள் பரவலடைகின்றது. சிறிய பறவைகள் நாயுண்ணிப் பழத்தைப் பெரிதாக விரும்புவதும் இல்லை. இருப்பினும் ஓரிரு பறவைகள் இப்பழத்தைச் சுவைத்துப் பார்ப்பதையும் அவதானிக்கலாம்.

நாயுண்ணிச் செடியின் இலையில் உள்ள சாற்றில் பூஞ்சண எதிர்ப்புத் தன்மை உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும் இக்களையைக் கட்டுப்படுத்த இங்கிலாந்திலுள்ள இம்பீரியல் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வழிசெய்துள்ளன. நாயுண்ணிச் செடியின் இலைகளில் துருநோயை ஏற்படுத்தும் *பக்சீனியா லன்ரனே (Puccinia Lantanae)* என்னும் ஒருவகைப் பூஞ்சணம் கண்டறியப்பட்டுள்ளது.

இதில் முக்கிய அம்சம் என்னவெனில் இப்பூஞ்சணம் நாயுண்ணிச் செடியில் மட்டும் நோயை உருவாக்கும் வல்லமை உடையது. இவ்வாறான தனித்த உயிரியினைக் கட்டுப்படுத்துவனவற்றையே சிறந்த உயிரியல் கட்டுப்பாடு எனக் கொள்ள

**குணசிங்கம் மிகுந்தன்**

லாம். இன்னொரு வகையில் நோக்கினால் சென்ற நூற்றாண்டில் இலங்கையிலுள்ள தென்னை மரங்களில் பாரிய தாக்கத்தை விளைவித்த தென்னை இலை சுரங்கமாக்கியான *புறோமீகோதீக்கா குமிஞ்சியை* அழித்தொழிக்கப் பயன்படுத்திய *டிமோக்கியா யவானிக்கா* என்ற ஒட்டுண்ணியின் தன்மையும் அவ்வாறானதே. அதனாலேயே பாட அலகுகளில் இவ்விடயம் கற்பிக்கப்படும் போதும் அவற்றை மாணவர்களுக்குக் காண்பிக்க முடியாதவாறு இருஉயிரினமும் அழிந்துவிட்டது.

நாயுண்ணிச் செடியைக் கட்டப்படுத்தும் துருநோய் என்றவுடன் எமது நாட்டு சரித்திரம் ஞாபகத்திற்குவரும். எமது நாட்டின் பணப்பயிராக ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த கோப்பிப் பயிரினை அழித்ததும் ஒரு வகை துருநோய் தான். அதனாலேயே கோப்பிப் பயிருக்கு மாற்றீடாகத் தேயிலைப் பயிர் அறிமுகமானது.

இந்த விடயத்திற்கு ஏன் இந்த முக்கியத்துவம் என எண்ணுவீர்கள். பாதீனிய விஷக் களை அழிக்க அழிக்கப் பரவிவருகின்றதல்லவா? அந்தளவிற்கு அதனது தன்னாதிக்கத் திறன் உள்ளது. பாதீனிய விஷக்களையில் இது போல ஏதேனும் நோய்கள், பூச்சிகளை அவதானித் உடன் எமக்குத் தெரியப்படுத்துங்கள். உயிரியல் முறை மூலம் கட்டுப்படுத்த வழிசெய்தாலன்றி வெறுமனே களைநாசனி பயன்படுத்தியும் கைகளால் பிடுங்கியும் முற்றாகப் பாதீனியத்தை அழித்தொழிக்கமுடியாது.

மெக்சிக்கோ நாட்டில் பாதீனிய விஷக்களையில் துருநோயை (Parthenium rust) ஏற்படுத்தும் பூஞ்சணம் *பக்சீனியா அப்றப்ரா* வர்க்கம் *பாத்தீனிகோலா* கண்டறியப்பட்டுள்ளது. இதே போல எமது பிரதேசத்தில் காணப்படும் நோயாக்கியைக் கண்டறிவது சிறந்தது. வேறிடத்திலிருந்து தருவித்தால் வலிந்து ஒரு நோயை சிலவேளைகளில் எமது பயிர்களில் ஏற்படுத்திவிடும் அபாயமும் உண்டு. இது விடயத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சி தேவை.

# பயிருக்கு உயிர் நீர்

**விவசாயத்தில் நீர்ப்பாசனம் முக்கியமான பகுதியாகும். ஒழுங்கான நீர்ப்பாசனம் பயிர்களுக்கு இல்லையேல் பயிர்கள் உரிய பலனைத் தரமாட்டா. எமது நாட்டில் வருடத்தின் அரைவாசி நாள்கள் மழை நீர் கிடைத்தாலும்கூட நீர்ப்பாசனமும் மிகவும் அவசியமாகும்.**

**நீர்ப்பாசன முறைகள் பற்றி இந்தக் கட்டுரையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.**

விவசாயச் செய்கையின் போது பல்வேறு முறைகளில் விவசாயிகள் பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தை மேற்கொள்கின்றனர்.

நீர் பெறப்படுகின்ற இடம், நீரின் அளவு, தரைத் தோற்றம், மண்ணின் தன்மை, காலநிலை, பயிரின் வகை, மூலதன வசதி போன்ற பல காரணிகள் நீர்ப்பாசன முறைகளையும், பாய்ச்ச வேண்டி நீரின் அளவையும் நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன.

இந்த நீர்ப்பாசன முறைகள் பல்வகைப் பட்டவையாகும். பாத்திப் பாசனம், பரவல் பாசனம், கால் பாசனம், தூவல் பாசனம், துளி முறைப்பாசனம், கசிவுமுறைப் பாசனம் என்று பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாசன முறைகளும் தரையின் தன்மைக்கு ஏற்பவும் பயிரின் வகைக்கு ஏற்பவும் அமைக்கப்படுகின்றன.

பாத்திப்பாசனமானது மிளகாய், கத்தரி, புகையிலை போன்ற பயிர்களுக்கு ஏற்றதாக உள்ளது. பயிர்களின் ஆரம்ப வளர்ச்சிக் காலத்தில் வேர்கள் ஆழமாக மண்ணுள் பரந்து வளர வேண்டும் என்பதற்காக நீர் வழங்குதல் மட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆகவே பயிர் குறிப்பிட்ட அளவு வளர்ச்சியடைந்த பின்னரே இந்த நீர்ப்பாசன முறை ஏற்றதாகும். சமதரைகளில் சிறிய தாழ் பாத்திகளாக அமைக்கவேண்டும்.

பரவல் பாசனமானது சமதரையாகவும், மண் உறுதியாகவும், இலகுவில் அரிமானம் ஏற்படாததுமான தரைகளிலேயே மேற்கொள்ளப்படுகிறது. இம்முறையில் நீர் பாய்ச்சும் போது நீர் அதிகம் விரயமாவதுடன் நீர் தேங்குவதைச் சகித்து வளர முடியாத பயிர்களுக்கு இம்முறை பிரயோசனமற்றதாகவும் போய் விடுகிறது. பெரும்பாலும் நெற்பயிர்ச் செய்கைக்கே இம்முறை கையாளப்படுகிறது. சால்பாசனமானது ஓங்கி உயர்ந்து வளருகின்ற கரும்பு போன்ற பயிர்களுக்கு ஏற்றதாகும். அத்துடன் மண்வெளி அதிகமாகத் தேவைப்படுகின்ற கிழங்குப் பயிர்களுக்கும் இந்த முறை மிகவும் சிறந்ததாகும். உயரமான தரையில் இருந்து பதிவான தரைக்கு சால்களினூடாக நீர் பாய்ச்சலாம்.

தூவல் பாசனமானது குழாய்களினூடாக நீர் கொண்டு செல்லப்பட்டு விசிறல் முறையில் நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. சமனற்ற தரையிலும் இப்பாசனம் மேற்கொள்ளப்படுவதால் வரம்புகள், வாய்க்கால்கள் என்பன அமைக்கத் தேவையில்லை.

நிலப்பயன்பாடு அதிகரித்தல், கூலியாட்கள் செலவு குறைதல், வளமாக்கிகளை சுலபமாகப் பயன்படுத்துதல் போன்ற பல நன்மைகள் இம்முறையால் உண்டு.

துளிமுறைப் பாசனத்தில் நீர் சிக்கனமாகப் பாவிக்கப்படுகின்ற போதும் பல சிரமங்கள் உண்டு. குழாய்களினூடாகக் கையாளப்படும் இந்த முறையால் குறிப்பிட்ட சில பயிர்களுக்குத் துளித்துளியாகத் தொடர்ந்து நீர் கிடைத்த வண்ணம் இருக்கும். அதிக நீர் பற்றாக்குறையுள்ள செல்வந்த நாடுகளில் இந்த முறை மிகவும் பிரபல்யம் அடைந்து வருகிறது.

கசிவுமுறைப் பாசனமானது நீர் கசிந்து மண்ணுக்குள் செறிவதன் மூலம் பயிர் வேர்களுக்கு நீர் கிடைக்கிறது. இதற்கு நுண்துளையுள்ள குழாய்கள் அல்லது பானை, முட்டி போன்ற மண்ணாலான பாத்திரங்களைப் பயன்படுத்தலாம். தோடை, எலுமிச்சை போன்றபயிர்களுக்கு இம்முறை மிகவும் சிறந்தாகும். சில இடங்களில் தென்னம்பிள்ளைகளுக்கு நீர் வழங்கவும் இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

*- சம்புகுன்றன்.*

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

# இரகசிய உடன்பாடு ஏதும் தமிழ்க் கட்சிகளுடன் இல்லை

## ஐ.தே.க. பிரதித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை4

எந்தவொரு தமிழ்க் கட்சிகளுடனும் தமது கட்சி எந்தவிதமான இரகசிய உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளவில்லை என்று ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் தமிழ்க்கட்சிகளுடன் நிபந்தனையுடன் கூடிய ஒப்பந்தங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

ஆனால் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்ப்பதற்கு தமிழ்க் கட்சிகள் மிகுந்த ஆவலோடு இருக்கின்றன.

இதனாலேயே அவை நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கத் தாமாகவே முன்வந்தன.

ஐ.தே.கட்சிக்கும் தமிழ்க்கட்சிகளுக்குமிடையே பெரிய இரகசிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் - தமிழ்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஐ.தே. கட்சி விலைக்கு வாங்கியுள்ளதாகவும் அரச தரப்பினால் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை - என்றார்.

(உ-4)

# கலைஞர் கைதை கண்டிக்கிறது தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

கொழும்பு,ஜூலை4

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியை மனிதாபிமானமற்ற முறையில் கைது செய்ததையும் -

தொடர்ந்து அவரை விளக்கமறியலில் வைத்திருப்பதையும் - ஆட்சேபித்து 1[illegible] தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு மகஜர் ஒன்றைக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம் நேற்றுமுன்தினம் மாலை கையளித்தது.

கூட்டமைப்பின் பிரதிநிதிகளான என்.ஸ்ரீகாந்தா, த.சித்தார்த்தன், அ.விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், குமரகுருபரன் ஆகியோர் கொண்ட குழு இந்தியத் தூதரை அவரது அலுவலகத்தில் சந்தித்து 20 நிமிடம் கலந்துரையாடியது. இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு விளாசமிடப்பட்ட மகஜர் ஒன்றைக் கூட்டமைப்பு தூதரிடம் கையளித்தது.

கருணாநிதியையும் அவரது சகாக்களையும், தொண்டர்களையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

(உ-3)

## கோப்பாய் ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவமனையில் முக்கிய சில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலைக்கான இரண்டாம் கந்தாய மருந்துகள் இது வரை வந்துசேரவில்லை என மருத்துவமனை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. தற்போது 2ஆம் கந்தாயக் காலம் நிறைவுறும் தறுவாயில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நயினை பக்தர்கள் நலன் கருதி காரைநகரிலிருந்து படகுச் சேவை

## கடற்படை ஏற்பாட்டில் நடக்கிறது

நயினாதீவு ஸ்ரீ நாகபூ ஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத் திற்குச் செல்லும் காரைநகர்ப் பகுதிப் பயணிகளின் நலன்கருதி காரைநகர் துறைமுகத்தில் இருந்து நயினாதீவுக்குக் கடற்படையினர் படகுச் சேவை நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் படகுச்சேவை ஆலய உற்சவகாலம் முடியும்வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் படகுச்சேவை தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.

கடந்த ஒருவருடமாக காரைநகர்த் துறைமுகத்திலிருந்து நயினாதீவுப் பகுதிகளுக்குப் பயணிகள் படகுச்சேவையை நடத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து காம்போன் கண்ணகை அம்மன் துறையில் இருந்தே பயணிகள் படகுச் சேவைகள் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-73)

## மருந்து விசிறும் பணி

யாழ்.தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையினால் உவர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தேங்காய்களைத் தாக்கும் 'மைற்' சிற்றுண்ணித் தாக்கத்தைக் கட்டுப்படுத்து முகமாகத் தென்னை மரங்களுக்கு மருந்து விசிறும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள தென்னந்தோட்ட உரிமையாளர்கள் தத்தமது பிரிவு கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு, பூச்சிநாசனியைப் பெற்றுத் தென்னை மரங்களுக்கு விசிறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-73)

## சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடு

கோப்பாய்ப் பகுதியில் இயங்கி வரும் இரண்டு சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைத்துள்ளன.

கோப்பாய் வடக்கு அம்மன் கோயிலடி சனசமூக நிலையத்திற்கு 75ஆயிரம் ரூபாவும், கோப்பாய் வடக்கு வள்ளி அம்மன் சனசமூக நிலையத்திற்கு 50ஆயிரம் ரூபாவும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளன.

(ம-72)

## குடும்பஸ்தர் காயம்

கொக்குவில் சந்தியில் கடந்த ஞாயிறன்று 4.30 மணியளவில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி, ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் உதயகுமார்(வயது 40) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-6)


# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1917 - 08 - 10



மறைவு
1995 - 07 - 11

## திருமதி பவளம் ஐயாத்துரை

திதி: 04.07.2001

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்:

*சங்கானை கிழக்கு,*
*சங்கானை.*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(89618)



வண்ணை - நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் சங்கத் தலைவர் கை. சிவரத்தினத்தின் தலைமையில் நடைபெற்றது.

திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, அபிராமி அந்தாதி ஆகியன தொடர்பாக நடத்தப்பட்ட இசைப் போட்டியில் அதிமேற்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றவரான - கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி - தனசொரூபி நவரத்தினத்துக்கு சிறப்பு விருந்தினர் அருளிசையரசு தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தனின் பாரியார் இசைக்கலைமணி திருமதி வரதலட்சுமி திருஞானசம்பந்தன் தங்கப்பதக்கத்தினை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். (ம)

# நயினை உற்சவத்தை ஒட்டி அங்கு நீதிமன்ற அமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை3

நயினாதீவு நாகபூசணி அம்பாள் தேர் மற்றும் தீர்த்தோற்சவங்களை ஒட்டி நயினாதீவில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் விசேட அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த அமர்வுகளை நடத்துவதற்காக ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் நயினாதீவுக்குச் சென்றுள்ளனர்.

இந்த நீதிமன்ற அமர்வுகள் இன்றும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இன்று தேர் உற்சவமும் நாளை தீர்த்தோற்சவமும் வெள்ளிக்கிழமை கப்பல் திரு விழாவும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## யுவதிகளுக்குப் பயிற்சி அளிக்க

# யாழ்.மாநகர சபைக்கு 14 தையல் இயந்திரங்கள்

## கொழும்பிலிருந்து எடுத்துவரப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்கும் யுவதிகளுக்கு தையல் பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்காக யாழ்.மாநகர சபை கொழும்பில் 14 தையல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்துள்ளது.

இந்தத் தையல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக யாழ். மாநகர சபைக்கு ஐரோப்பிய நாடு ஒன்று 2 லட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்திருந்தது. அந்த நிதியில் இருந்தே மேற்படி 14 தையல் இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி தையல் இயந்திரங்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடு துவரப்பட உள்ளன. இயந்திரங்கள் வந்து சேர்ந்ததும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யுவதிகளுக்கான தையல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் என்று மாநகர சபை முதல்வர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

இந்தத் தையல் வகுப்புக்களைத் தற்காலிகமாக கண்டி வீதியில் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-6)

## பரிசு வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை4

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் சுவாமி விவேகானந்தர் பற்றி இடம்பெற்ற கருத்தரங்கையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்று காலை 8.40 மணிக்கு கல்லூரி அதிபர் சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா பரிசில்களை வழங்குவார். (ம)

## பொதுக் கூட்டம்

வலி.மேற்கு கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேரவையின் தலைவர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கலைஞர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-175)

## மாதகலில் கால்நடை வைத்திய நிலையம்

மாதகல் பகுதியில் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை ஒன்று தற்காலிகமாக விரைவில் நிறுவப்படவுள்ளது.

மாதகல் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வாரத்தில் வியாழக்கிழமை மட்டும் தற்காலிக பணிமனை மாதகலில் இயங்கும். கால்நடை வைத்திய அதிகாரி இது குறித்து மானிப்பாய்ப் பிரதேச சபைத் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். இதனையடுத்து - வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபைத் தலைவரின் பணிப்பின் பேரில் மாதகல் கிராம அபிவிருத்திச் சங்கம் தற்காலிக கால்நடை வைத்திய நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுக்கவுள்ளது. (ம-185)

## சங்கானையில் கண் பரிசோதனை முகாம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஆதரவுடன் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண்பரிசோதனை முகாம் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பிரதான அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரிசோதனை முகாமில் யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன் கண்பரிசோதனைகளை மேற்கொள்வார். (ம-4)

# எழுத்துலகில் பெயர் பதிக்கப்போகும் எழுத்தாளர்களை அடையாளம் கண்ட பெருமை யாழ்.பல்கலையையே சாரும்

## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஜூலை4

இனிவரும் 25 வருடங்களில் எழுத்துலகில் பெயர் பதிக்கப்போகும் எழுத்தாளர்களை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்ட பெருமை யாழ். பல்கலைக்கழகத்தையே சாரும்.

கடந்த 27ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினரால் கைலாசபதி கலையரங்கில் நடத்தப்பட்ட "மண்ணின் மலர்கள்" என்ற சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய கலாநிதி எஸ். சிவலிங்கராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழகத் தமிழ்மன்றத் தலைவர் அ.பௌநந்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

பல்கலைக்கழக மாணவர்களின் எழுத்தாற்றலை வெளிப்படுத்தும் வகையில் இன்று வெளியிடப்படும் சிறுகதைத் தொகுதி அமைந்துள்ளது. 13 மாணவர்களின் சிறுகதை ஆக்கங்கள் இந்த நூலிலே காணப்படுகின்றன.

சமூக உறவு நிலைகள், கணவன் - மனைவி உறவின் பல்வேறு அம்சங்கள், சீதனக் கொடுமை போன்ற சமூகப் பிரச்சினைகளைச் சிறப பாகத் தமது கதைகள் மூலம் அவர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். 'கனதி', 'பித்துமனம்', 'வானதியின் கணவன்', 'முன் முடுக்கு', 'சீதனக் கலசம்' போன்ற கதைகள் சிறந்த சமூகக் கதைகளாகக் காணப்படுகின்றன.

இவை மட்டுமன்றி விளையாட்டு, விடிவு, பாதை, என்னவன் ராமனல்ல, கிளிக்குஞ்சு, மரணமும் போன்ற கதைகள் சமகாலப் போராட்டத்தையும் தமிழ்த்தேசிய உணர்வையும் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன.

இந்த நூலிலே இடம்பெற்றுள்ள ஒவ்வொரு சிறுகதையையும் பார்க்கும்போது ஆரம்ப எழுத்தாளர்களின் கதைகள் போலல்லாமல் அவை முதிர்ந்த எழுத்தாளர்களின் கதைகள் போலவே அமைந்துள்ளன - என்றார்.

இந்த நூலுக்கான மதிப்பீட்டுரையை நிகழ்த்திய கலாநிதி க. குணராசா தமதுரையில் -

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக் காலகட்டங்களை பலவகையான பெயர்களில் அழைக்கலாம். அந்த வகையில் ஐம்பதுகளுக்கு முன்னர் ஈழகேசரிப் பத்திரிகையில் வெளிவந்த கதைகள் சமுதாயச் சீர்திருத்தக் கதைகளாக அமைந்திருப்பதனால் அக்காலம் சமுதாயச் சீர்திருத்தக் காலம் என்று அழைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முற்போக்குக் காலம், புத்தெழுச்சிக் காலம், தமிழ்த் தேசிய உணர்வுக் காலம் என்று காலகட்டங்கள் வகுக்கப்பட்டன.

இக்காலகட்டங்களில் தினகரன், சுதந்திரன், சிந்தாமணி, கலைச் செல்வி ஆகிய பத்திரிகைகள் சிறுகதை எழுத்தாளர்களுக்கு களமாக அமைந்தன.

அந்த வகையில் 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதியதொரு காலகட்டம் உருவாகியது. இளம் எழுத்தாளர்கள் இக்காலத்தில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு "சஞ்சீவி" பத்திரிகை களம் அமைத்துக்கொடுத்தது.

இந்த "மண்ணின் மலர்கள்" என்ற சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள கதைகள் யாவும் அனுபவம் வாய்ந்த படைப்பாளிகளினால் ஆக்கப்பட்ட கதைகள் என்ற பிரமையை வாசகர் மனதில் ஏற்படுத்துபவையாக அமைந்துள்ளன.

இந்த எழுத்தாளர்கள் சிறந்த உத்திகளைக் கையாண்டு தமது எழுத்துக்கள் வரலாறு பேசக்கூடிய வகையில் அமைத்துள்ளனர் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் இரா.சிவச்சந்திரன் தமது மதிப்பீட்டுரையில் தெரிவித்ததாவது:-

5 பெண் எழுத்தாளர்களும், 8 ஆண் எழுத்தாளர்களுமாக 13 மாணவர்களால் எழுதப்பட்ட சிறுகதைகள் "மண்ணின் மலர்களாக" இன்று நூல் வடிவம் பெற்றிருக்கின்றது.

பல்கலைக்கழகத்தின் 25 வருட வரலாற்றில் இப்பொழுதே இப்படியானதொரு நூல் வெளியீடு சாத்தியமாகின்றது.

நல்ல தமிழ் நடையுடனும், கிராமியச் சொற்கள் பொதிந்த அற்புதமான மொழிநடையுடனும் வெளிவரும் இந்த நூலின் எழுத்தாளர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

பல்கலைக்கழக மட்டத்தில் இப்படியான நூல்களையும் நல்ல சஞ்சிகைகளையும் தொடர்ந்தும் வெளிக் கொண்டுவரவேண்டும் - என்றார். (க-4)

# வாசகர் திருமுகம்

## "சஞ்சீவி" வெளிவராமைக்கான காரணத்தைக் கூறுங்களேன்!

2001-06-09 இல் வாசகர் திருமுகத்தில் "உரத்து ஒலமிடுகின்றோம்" என்ற தலைப்பில் ந.சத்தியபாலன், யாழ். வதிரிவாசன் அவர்களால் எழுதிய கருத்துக்கள் உண்மையிலும் உண்மையே. அந்த வகையில் 'சஞ்சீவி' வாரமலரானது மீண்டும் வெளிவர வேண்டுமென்று இத்தால் நானும் கேட்டுக்கொள்கின்றேன்.

நாளாந்தம் வெளிவருகின்ற "உதயனா"னது எம் மக்கள் மத்தியில் ஓர் அன்றாட வாழ்வாகிவிட்டதைப் போலவே "சஞ்சீவி" வாரமலரும் எம் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்ததென்பதே நிதர்சனமாகும். ஒவ்வொரு சனிக்கிழமையும் எப்படா வரும் என்று காத்திருந்து "சஞ்சீவி" வாங்க அதிகாலையிலேயே கடை வாசலில் தவம் கிடந்தோம். "சஞ்சீவி" வாங்கவென்றே வழமைக்கு மாறாக அதிகாலையிலேயே துயில் எழும்பியதுமுண்டு.

இதைவிடப் புதிது புதிதாக வெளியிடப்பட்டு எத்தனை பத்திரிகைகள் தான் வந்தாலும் எமது "சஞ்சீவி"க்கு நிகர் எதுவுமேயில்லையென்ற பார்வை எப்போதுமே இருந்து வந்தது. எம் இளம் எழுத்தாளர்க்கெல்லாம் களம் அமைத்துத் தந்து அவர்களை மென்மேலும் வளர்ச்சியுற வைத்தது "சஞ்சீவி"யே.

தற்கால வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டி எங்கெங்கு எக்கருத்துச் செல்லவேண்டுமோ அங்கங்கு போய்ச் சேரும் முகமாக கவியிலே பொருள் எழுதி, நடைமுறைக் கதையை சிறுகதையாக்கி, அரசியலையோ, யுத்தத்தையோ, பார்வைக்கு நேரே நாடிபிடித்து உணர்த்தி, நவீன தொடர்கதை, பொது அறிவு... அப்பப்பா! இவ்வாறு உண்மைக்கு வித்திட்டு வளர்த்த "சஞ்சீவி" இன்றில்லையென்ற வாழ்வு எமக்கெல்லாம் துரதிர்ஷ்ட வாழ்வாகிப் போய்விட்டது.

எமது பத்திரிகை "உதயன்"-"சஞ்சீவி" என்ற உரிமையோடு "உதயன்"-"சஞ்சீவி" நிர்வாக. ஆசிரிய உயர் பீடத்துக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கின்றோம்' இனியும் தாமதிக்கவேண்டாம். வெகு விரைவாகச் "சஞ்சீவியை" மீண்டும் வெளிக்கொணர ஆவன செய்யுங்கள். இல்லையெனில் "சஞ்சீவி" வெளியிடப்படாமைக்குரிய தகுந்த காரணத்தையாவது தெரிவியுங்கள்.

எத்தனையோ சிக்கல்களை - பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் காரணமான உதயனின் "வாசகர் திருமுகம்" பகுதி எமது அதிமுக்கியமானதும் உணர்வுகள் சங்கமிக்கும் வாழ்க்கைப் பிரச்சினையுமான "சஞ்சீவி"யை வெளிக்கொணர வேண்டும் - என்ற பேரவாவை தீர்த்து வைக்கும் என நம்புகின்றோம்.

*மானிப்பாய்.* **- அ.அருள்ஜெயரட்ணம், அ.சூரியன்.**

## 'சீசன் ரிக்கெட்' வழங்கும் விவகாரம்: போக்குவரத்துச் சபை அதிகாரி பதில்

ஒரு மாணவனின் 'சீசன்' பிரச்சினை என்ற விடயம் சம்பந்தமாக 12.06.2001ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 'வாசகர் திருமுகம்' பகுதியில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவரினால் வரையப்பட்டுள்ள 'திருமுகம்' சம்பந்தமாக, பின்வருவனவற்றை அறியத்தருகின்றேன்.

பாடசாலை மாணவர்களுக்கு, பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தி எமக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற மாணவர் பெயர்ப் பட்டியலின் பிரகாரமே, பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளில் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படும் நேரங்களில் தவிர்க்கமுடியாத காரணங்களினால் சில மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகம் கொடுக்கமுடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

அத்தகைய மாணவர்களுக்குப் புறம்பாக இன்னொரு பட்டியல் தயாரிக்கப்பட்டு. சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தி எமக்குப் பருவகாலச் சீட்டு விற்பனை முடிவு திகதியாகிய 5ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கான பருவகாலச் சீட்டுகள் எம்மால் வழங்கப்படும்.

இவ்வாறு சில பாடசாலைகளினால் இரண்டாவது பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களுக்கான பருவகாலச் சீட்டுக்கள் எம்மால் வழங்கப்பட்டுமுள்ளன.

மேலும் வட்டுக்கோட்டையில் இருந்து வலி.தென்மேற்கில் உள்ள பாடசாலைக்கு யாழ்ப்பாணம் ஊடாகச் செல்வதற்கு 34 ரூபா செலவாகிறது என சம்பந்தப்பட்ட மாணவனால் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டையிலிருந்து வலி.தென்மேற்கிலுள்ள (மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு) சித்தன்கேணி ஊடாகச் சென்று வருவதற்கு 20ரூபா மட்டுமே செலவாகும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

*கோண்டாவில்.* **பொதுமுகாமையாளர்.**
*வ.பி.போ.ச.*

## பின்பற்றுவதற்குகந்த உதாரணம்

உயர்கல்விப் பீடமொன்றில் அண்மையில் நிகழ்ந்த சுவாரஸ்யமான சம்பவமிது.

புதிய மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அனைத்துப் புதிய மாணவர்களும் நீண்ட மண்டபம் ஒன்றில் அமர்ந்திருக்க கல்விப்பீடத்தின் தலைவரும் சில விரிவுரையாளர்களும் அவர்களுக்கான பதிவு வேலைகளை மேற்கொண்ட வண்ணமிருந்தனர். புதிய மாணவர்களைச் சீண்டிப்பார்க்க விரும்பிய முதுநிலை மாணவர்கள் அம்மண்டபத்தின் சுற்றுப்புறங்களில் அங்குமிங்குமாக அலைமோதிக் கொண்டிருந்தனர்.

இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த எனது மனத்திரையில் நடந்து முடிந்த சம்பவம் நிழலாடியது. பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் கைதிகள் படுகொலை செய்யப்படுவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் தாக்குதல் நடத்த வந்தவர்கள் முகாமின் சுற்றுப்புறங்களில் அங்குமிங்குமாக அலைமோதித்திரிந்து நோட்டம் பார்த்து தம்மைத் தாக்குதல் நிலைக்கு - அதாவது படுகொலை மனோநிலைக்கு (MOOD OF COMMITTING MASS MASSACRE) தயார்ப்படுத்தியது போல இருந்தது சிரேஷ்ட மாணவர்களின் நடமாட்டம்.

ஏதோ விபரீதம் நடக்கப்போவது போல ஒருகணம் புரியாத அமைதி சற்று நிமிடங்களுக்கு நீடித்தது. அனைத்துப் புதிய மாணவர்களும் திருவிழாக் கூட்டத்தில் தாய், தந்தையரைத் தவறவிட்ட குழந்தைகளைப் போல் திருதிருவென விழித்துக் கொண்டிருந்தனர். பதிவு வேலைகள் முடிவுற்று விரிவுரையாளர்கள் அம்மண்டபத்தை விட்டு வெளியேறியதும் காத்திருந்த முதுநிலை மாணவர்கள் சரமாரியாக அங்கு ஊடுருவினர்.

அனைவரும் எதிர்பார்த்ததற்கு மாறாக இரு தரப்பாரினதும் சந்திப்பு மிகவும் அமைதியாகவும் ஆர்ப்பாட்டமற்ற முறையிலும் அன்பான - பண்பான குசலம் விசாரிப்புக்களோடும் முடிவுற்றது. "ராகிங்"குக்கு எதிராக இறுக்கமான சட்டதிட்டங்கள் (RIGID RULES AND REGULATIONS AGAINST RAGGING) இல்லாதபோதும் முதுநிலை மாணவர்கள் இளநிலை மாணவர்களோடு இவ்வாறு நடந்து கொண்டமை பாராட்டுக்குரியது. இது மற்றைய கல்விப்பீடங்களாலும் பின்பற்றப்படுவதற்கு உகந்த ஒரு முன்னுதாரணமாகும்.

*யாழ்ப்பாணம்.* **யாழ்.வதிரிவாசன்.**

## The Barbara Mulvaney Computer Training Center

123, Temple Road, Jaffna

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்தும் ஐ.நாவின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் பாபரா மல்வானி கணனிப்பயிற்சி நிலையத்தில் உங்களை இணைத்துக் கொள்வதன் மூலம் உங்களின் கணனி அறிவினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**Diploma Courses**

- Diploma in Microsoft Office
- Diploma in Photo graphics
- Diploma in Desktop Publishing
- Diploma in Information Technology
- Diploma in Programming
- Kids Programming

**Certificate Courses**

| | |
|---|---|
| Adobe PageMaker | Microsoft Word |
| Auto CAD | Microsoft Excel |
| Visual Basic | Microsoft Access |
| Corel DRAW | Microsoft PowerPoint |

அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் (இரு பாலாரும்) ஆகியோருக்கான பிரத்தியேக வகுப்புக்கள் அவர்களின் வசதிப்படி வெவ்வேறு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

மேற்படி வகுப்புக்கள் யாவும் 10-7-2001 அன்று ஆரம்பமாக இருப்பதால் 9-7-2001 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

- நிர்வாகம்



## திகதி மாற்றம் பற்றிய அறிவித்தல்

### வானவில் - முத்தமிழ் விழா

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அபிவிருத்திக்காக பழைய மாணவர் சங்கத்தினரால் நாளை (05-07-2001) வியாழக் கிழமை நடத்தப்பட இருந்த "வானவில்" பல்சுவை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணங்களால் 15-09-2001 சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். 5-7-2001இற்குப் பெறப்பட்ட அனுமதிச் சீட்டுக்கள் 15-09-2001 அன்று செல்லுபடியாகும்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

(89713)



## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

### பாரம்பரிய கலைகள் பயிலரங்கு

மேற்படி பயிலரங்கானது நாட்டுக்கூத்து, இசைநாடகம், கிராமியக் கலைகள் தொடர்பான பயிற்சிகளை வழங்கும் நோக்கோடு எமது மன்றத்தால் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

பயிற்சிக் காலம் : ஒரு வருடம்

**விண்ணப்ப முடிவு திகதி: 22.07.2001**

ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2393.

பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்.

(C/17290)


## சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருணகிரிநாதர் விழா

வடமராட்சி,ஜூலை4

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தும் அருணகிரிநாதர் விழா நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ஆ.சிவநாதன் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் தி.செல்வமனோகரன் 'ஆறுமுகமான பொருள்' என்ற தலைப்பிலும் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் 'குருவாய் வருவாய்' என்ற தலைப்பிலும் ஆசிரியர் ச.லலீசன் 'நாளென் செய்யும்' என்ற தலைப்பிலும் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் ஆகிய புராணங்களிலிருந்து சொற்பொழிவாற்றுவார்கள். யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை உதவி விரிவுரையாளர் ஸ்ரீ.தர்சனனின் திருப்புகழ் இசை அரங்கும் இடம்பெறும்.

(ம-117)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்.சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் ஏற்பாடு செய்துள்ள 'அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஏவுகணைத்திட்டம் - மீண்டுமொரு பனிப்போர்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தொடக்கவுரையை கே.ரி.கணேசலிங்கம் நிகழ்த்துவார். (ம-7)

★ ★ ★

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.30 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(ம-7)

## கால்நடை வைத்திய நிலைய திறப்பு விழா

வடமராட்சி,ஜூலை4

கரவெட்டிப் பகுதியில் அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தின் உப நிலையம் ஒன்றை எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் டாக்டர் பி.இராமநாதன் திறந்து வைப்பார்.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நெல்லியடியை அடுத்துள்ள திருமகள் சோதி வீதிச் சந்தியில் இந்த உபநிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான அனைத்து சிகிச்சைப் பணிகளும் இவ்வைத்திய உப நிலையத்தில் மேற்கொள்ளப்படும் என பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் சி.வசீகரன் அறிவித்துள்ளனர்.

(ம-173)

## கிணறு மக்கள் பாவனைக்கு

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்ட வட்டு. வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பொதுக்கிணறு அண்மையில் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாகச் சேதமடைந்திருந்த இந்தப் பொதுக் கிணறு சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினரால் அண்மையில் புனரமைக்கப்பட்டது. (ம-175)


## கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1936 | 2001 |
| 08 | 07 |
| 05 | 03 |

### அமரர் வ.சோதிலிங்கம்

எமது பாடசாலை அதிபர் திருமதி ர.சோதிலிங்கம் அவர்களின் அன்புக் கணவர் வ.சோதிலிங்கம் அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு நாம் மனம் வருந்துவதுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

(89714)



## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1936 | 2001 |
| 08 | 07 |
| 05 | 03 |

### அமரர் வயித்திலிங்கம் சோதிலிங்கம்

எமது மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினரும்,
மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களான
**சோ.ஜனகன், சோ.விபுலன்**
ஆகியோரின் அன்புத் தந்தையும்
மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர்
**திருமதி ரதிதேவி சோதிலிங்கம்**
அவர்களின் அன்புக் கணவருமான

மூளாயூர் **அமரர் வயித்திலிங்கம் சோதிலிங்கம்** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- இந்து இளைஞர் மன்றம்.
மூளாய். (89724)



## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 05 |
| 10 | 06 |
| 1913 | 2001 |

### சத்தியாப்பிள்ளையோசப் (முத்தையா)

ஆண்டவருக்குள் இருப்பவர் பேறு பெற்றோர்
கருணை தெய்வமே இறைவா உமது அடியாராகிய
**சத்தியாப்பிள்ளை யோசப்புக்கு**
நித்திய இளைப்பாற்றியை கொடுத்தருளும்

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் தொலைபேசி தந்தி தொலைநகல் மூலமும் எமது துயரில் நேரில் வருகை தந்த குருமார் அருட்சகோதரிகட்கும் உற்றார், உறவினர், அயலவர் அனைவரிற்கும் நன்றி தெரிவிப்பதுடன் நாளை வியாழக்கிழமை 05.07.2001 காலை புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறும் ஆன்மசாந்தி திருப்பலியிலும் அதை தொடர்ந்து அன்னாரது வீட்டில் நடைபெறும் தேனீர் உபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

77A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!
ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை

## பூப்புப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனி மாதம் 21ஆம் நாள் நாளை (05.07.2001) வியாழக்கிழமை காலை 11.00 மணிமுதல் 11.55 மணிவரையுள்ள சித்தயோகம் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரி
**செல்வி குணேந்திரன் மயூரி** அவர்களுக்கு

பூப்புப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி குணேந்திரன் குடும்பத்தினர்,
திரு.திருமதி சரவணமுத்து கந்தசாமிப்புலவர் (பேரன்)

601, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(89712)

# யாழ். தென்னிந்திய திருச்சபை

## நகர்ப்பணி

மேற்படி எமது நிறுவனத்தில் கீழ் வரும் பாடநெறிகள் 11-07-2001 இல் ஆரம்பமாகவுள்ளன.

- தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து
- ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து
- தையல்
- கேக்ஐசிங்
- சிகையலங்காரம்
- மனையியல்
- பூவேலை

இவற்றுக்கான விண்ணப்பங்களை 09-07-2001 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

நிர்வாகி,
41, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(89752)



யாழ்ப்பாணம்

## புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின்

அனுசரணையுடன் நடைபெறும்

# அருணகிரிநாதர் விழா

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் நாளை (05 - 07 . 2001) வியாழக்கிழமை
காலை 9-30 மணி

தலைவர்: திரு. ஆ. சிவநாதன்
(ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி)

### நிகழ்ச்சிகள்

சொற்பொழிவுகள்:

"ஆறுமுகமான பொருள்" (திருப்புகழ்)
திரு. தி. செல்வமனோகரன்
(யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவன்)

"குருவாய் வருவாய்" (கந்தரநுபூதி)
சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கம்

"நாளென் செயும்" (கந்தரலங்காரம்)
திரு. ச. லலீசன் (ஆசிரியர்)

இசையரங்கு (திருப்புகழ்)
குரலிசை திரு. ஸ்ரீதர்ஷனன்
(உதவி விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம் நுண்கலைத்துறை)

(89754)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவகுரு சின்னம்மா

வேலணை மேற்கு, வண்ணாம்புலத்தைச் சேர்ந்த திருமதி சிவகுரு சின்னம்மா நேற்று (3-7-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா (மயில்வாகனத்தின்) வின் சகோதரியும், அன்னம்மாவின் மைத்துனியும் நாகேஸ்வரியின் அன்புத் தாயாரும் இளமுருகனாரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(4-7-2001) புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேலணை மேற்கு அம்பலவி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
க. இளமுருகனார்
(மருமகன்)

வண்ணாம்புலம்,
வேலணை மேற்கு

(89750)

## சின்னத்துரை கனகசௌந்தரி

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த சின்னத்துரை கனகசௌந்தரி 02—07—2001 திங்கட்கிழமை அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை (முன்னாள் ஆசிரியர், கொண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாசாலை), கனகம்மா ஆகியோரின் புதல்வியும் திருமதி ம. யோகசௌந்தரி (ஆஸ்திரேலியா), சி. தங்கராசா (ஆஸ்திரேலியா—முன்னாள் முகாமையாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), சி. தவராசா (நாடாளுமன்ற உறுப்பினர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மகேந்திரன், திருமதி ரீற்றா (ஆஸ்திரேலியா), ஜீவரஞ்சினி ஆகியோரின் மைத்துனியும் தர்சினி (ஆஸ்திரேலியா) யின் சித்தியும், பிராமி, பிரமேஸ் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோயில் வீதி, கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (04—07—2001) புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
சி. தவராசா (சகோதரன்)
(நாடாளுமன்ற உறுப்பினர்)

கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(89751)

# சமய சந்நிதிகளில

யாழ்ப்பாணம், ஜூலை 4

கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு செல்வநாயகி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். நாளை காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-4)

★ ★ ★

சுட்டப்பிராய் முத்துமாரியம்மன் தேர்த்திருவிழா இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும். நாளை வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழா இடம்பெறும், (ம)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீமூத்தவிநாயகர் ஆலயத்தின்வருடாந்த தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். (ம-7)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு விசேட அபிசேகத்துடன் ஆரம்பமாகி 10 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து வலம்வருவார். 12 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை பகல் 10 மணிகருத் தீர்த்த உற்சவம் இடம்பெறும். தொடர்ந்து அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (க-133)

## பிரிவுபசார விழா

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையின் அதிபராயிருந்து இளைப்பாறிய வி. ஏரம்பமூர்த்தியின் பிரிவுபசார விழா இன்று முற்பகல் 11 மணிக்கு அதிபர் பொ. கணேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-27)

## பல்கலைக்கழக கிளிநொச்சி மாணவர்களுக்கு

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் விசேட கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வணிக மண்டபம் II இல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ஓ-6)

## தென்மராட்சி அதிபர்கள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 4

கடந்த இரண்டாயிரமாம் ஆண்டுக்கான ஜி. சீ. ஈ. உயர்தர ஆளுநர் புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் மற்றும் அதே ஆண்டில் தரம் 8, 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான ஜனாதிபதி விசேட புலமைப் பரிசில் ஆகிய கொடுப்பனவுகள் தொடர்பான காசோலை இலக்கம், கொடுப்பனவு செய்த திகதி, காசோலை ஒப்பமிட்டவர்கள் பெயர் விவரங்கள் ஆகியவற்றை—

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள அதிபர்களின் கூட்டத்துக்கு வரும்போது நிதிக் கிளையில் எழுத்தில் சமர்ப்பிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

இந்த விவரங்கள் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரால் கணக்காய்வுக்கென கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ)

# கிரிக்கெட் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் 11 வயதுக்கும் 13 வயதுக்கும் இடைப்பட்ட வீரர்களுக்கு கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்றை விரைவில் நடத்தவிருக்கின்றது.

யாழ். மாவட்டக் கிரிக்கெட் பயிற்றுநரின் மேற்பார்வையில் இடம்பெறும் இந்தப் பயிற்சி முகாமில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் தமது பெயர், விவரங்களை நாவலர் வீதியில் உள்ள கிரிக்கெட் அக்கடமியில் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் காலை 7 மணி முதல் 9 மணி வரை பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-3)


## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

சர்வதேச இந்துமத குருபீடத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியமைக்கும், இந்துசமய வளர்ச்சிக்கு இந்துமத குருபீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கும், குருகுல மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்கும் சர்வதேசரீதியில் இத்தகைய நற்செயல்கள் நிறைவேற்றப்பட்டமைக்காக—

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு-கிழக்கு தமிழ் விவகார, இந்துசமய கலாசார அமைச்சரான
மாண்புமிகு கௌரவ அமைச்சர்
திரு. கே.என். டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கும்,

வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவரும்,
இந்துசமய விவகாரப் பொறுப்பாளருமான
திரு. ந. திரிலோகநாதன் அவர்களுக்கும்,

நல்லூர் பிரதேசசபைத் தலைவர்
திரு. க. மணிபல்லவராஜன் அவர்களுக்கும்,

நாடாளுமன்ற உறுப்பினருமான
திரு. கே.வி. குகேந்திரன் அவர்களுக்கும்,

ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவர்
திரு. ந. மதனராஜா அவர்களுக்கும்,

வலி. தெற்கு பிரதேசசபைத் தலைவர்
திரு. கமலசேகரன் அவர்களுக்கும்,

யாழ்ப்பாண அமைப்பாளருமான
திரு. இளங்கோ அவர்களுக்கும்

எமது அமைப்பின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நன்றியுடன்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.
யாழ்ப்பாணம்.

தலைமைச் செயலகம்,
இல, 74, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(89749)


## கண்ணீர் அஞ்சலி

யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர்
திருமதி ரதிதேவி சோதிலிங்கம் அவர்களின்
கணவர்

### வயித்திலிங்கம் சோதிலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு மனம்கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானைக் கல்விக் கோட்ட
உதவிக் கல்விப் பணிப்பாளரும்,
அதிபர்களும், அலுவலர்களும.

அதிபர் சங்கம்,
சங்கானைக் கல்விக் கோட்டம்.

(சி/17301)

## கண்ணீர் அஞ்சலி



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின (ஈ. பி. டி. பி )
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
கௌரவ சி. தவராசா
அவர்களின் அன்புச் சகோதரி

### சி. கனகசௌந்தரி

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருடன் எமது துயரைப் பகிர்ந்து கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஐ. சிறிரங்கேஸ்வரன்

தலைவர், உறுப்பினர்கள்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி,

(சி/17302)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வகுப்புகள்

தமிழ்த் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கிலத் தட்டெழுத்து, புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு:- 5,அம்மன் வீதி, (வைரவர் கோயில் முன்பாக) கந்தர்மடம், யாழ்ப்பாணம். (89520)

## தோட்டக்காணி விற்பனைக்கு

சுமார் 50 பரப்புத் தோட்ட நிலம் நவக்கிரி, புத்தூர் வீதியில் நவக்கிரியில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு- விளம்பர இல.1317, மே/பா, உதயன். (89681)

## மணகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 30வயது உத்தராட நட்சத்திரம், 7இல் செவ்வாய் (கிரக பாவம் 32) உடைய மல்லாவியில் தொழில் புரிபவருக்கு நற்குணமுள்ள அழகான படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம் மற்றும் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1318, மே/பா.உதயன், யாழ்ப்பாணம்.(89706)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன Dashound நாய்க்குட்டிகளும் ஓர் அல்சேஷன் (Alsation), பெண் நாயும் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (89702)

## காணவில்லை

வெள்ளை நிறமுடைய (இரண்டு வயது) பசுமாடு 02-07-2001 தொடக்கம் காணவில்லை. அடையாளம் N.R, வேல்சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது. கண்டவர்கள் இந்த விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். இல.292/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (89710)

## படிவம்

ஒப்பந்த அடிப்படையில் தபால் சேவை அலுவலர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 45 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட க.பொ.த (உ/த) தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம். (பட்டதாரிகளுக்கு முன்னுரிமை உண்டு) மாதச்சம்பளம் ரூ5000/= மாதிரிப் படிவத்திற்கு: பாரதி, 430, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/17289)

## தவறிவிட்டது

சென்.ஜேம்ஸ் வீதி, சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த யேசுதாசன் தயாளன் என்பவரது தே.அ.அ. (இல.703184243V), வி.அ.அ. (இல.0905004539) இரண்டும் பண்டத்தரிப்பு நகரப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயா போட்டோ, சென்.ஜேம்ஸ் வீதி, பண்டத்தரிப்பு எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (89696)

ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த திருமதி கந்தசாமி சரஸ்வதி என்பவரது தே.அ.அ. (இல.528060153V), வி.அ.அ. (இல.090301440) என்பன 30-06-2001 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சுவேலி நோக்கி வந்த மினிபஸ்ஸில் பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆவரங்கால் உபதபாற்கந்தோரில் ஒப்படைத்துதவவும்.(89697)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர் வேண்டிய நிறையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- கிருஷ்ணா, விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். (89583)

Broiler, Cullbirds, Cockerels, Soup chicken இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் காலை 6.30 முதல் மாலை 6.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (89701)

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்: சுத்தம் செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (89582)

## விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய அல்சேஷன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.6, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு (ராமகிருஷ்ணா பாடசாலை அருகில்) (89651)

40 நாள் நிரம்பிய கறுப்பு இன அல்சேஷன் நாய்க்குட்டிகளும் இரண்டு வயது நிரம்பிய ஆண், பெண் நாய்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மார்க்கண்டு, M.S.லேன், கோண்டாவில கிழக்கு, கோண்டாவில். (89694)

# கஞ்சாச் செடியுடன் ஒருவர் கைது

தென்மராட்சி,ஜூலை4

சட்ட விரோதமாகக் கஞ்சாச் செடியினை விற்பனை செய்யமுயன்ற நபர் ஒருவரை நெல்லியடிப் பொலீஸார் கொடிகாமத்தில் வைத்துக் கைது செய்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மாசார்ப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து கொடிகாமத்தில் தங்கியுள்ள பொன்னையா நாகேந்திரராசா என்பவரே பொலீஸாரால் கைது செய்யப்பட்டவராவார்.

(ம-117)

# சேவைநலன் பாராட்டும் நன்றி நவிலலும்

எமது சங்கம் ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்று வரைக்கும் எமது வேலவன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தை வளர்ப்பதற்கும், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதற்கும், எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் தனது நேரம், காலம், சிரமம் பாராது சகல உதவிகளையும் எமக்கு வழங்கியவரான

உயர்திரு.

**லயன் சோமசுந்தரம் விக்னேஸ்வரன்**

*(வலி.மேற்கு கடற்றொழில் பரிசோதகர்)*

அவர்கள் எமது பகுதியிலிருந்து தீவகப் பிரதேசத்துக்கு இடம் மாற்றலாகிச் சென்றிருந்தாலும், அவரது தன்னிகரில்லாத அளப்பரிய சேவைகளை நாம் மறந்து விடாமல் நன்றி கூறி அவரது சேவைநலனைப் பாராட்டுவதுடன் சகல சிறப்புகளும் பெற்று நீடுவாழ வாழ்த்துகின்றோம்.

அராலி தெற்கு,
வேலவன் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம்.

(89719)

# சென்றல் நேர்சிங் ஹோம் (தனியார்) வ.து,

**350, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

இன்று (04.07.2001) புதன்கிழமை முதல் எமது சேவைகள் மேலும் விரிவாக்கப்பட்டு, பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

- இரவு / பகல் தொடர்ச்சியான வெளிநோயாளர் சேவை.
- நோயாளர் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகள்.
- பிரசவ விடுதி வசதிகள்.
- வம்சவிருத்தி சுகாதாரப் பிரச்சினைகளுக்கான ஆலோசனை.
- வைத்திய நிபுணர்களின் ஆலோசனை வசதிகள் விரைவில் சத்திர சிகிச்சை வசதிகளும் ஆரம்பிக்கப்படும்.

(89735) - நிர்வாகம்.

# வாழ்த்துகின்றோம்

யா/யூனியன் கல்லூரி 19 வயதின் கீழ் வலைப்பந்தாட்ட அணியினர், மாவட்ட மட்டப் போட்டியில் முதலாம் இடம்பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தேசிய மட்டத்திலும் கலந்து கொண்டு சிறப்பாகச் செயற்பட்டு முதலாம் இடம் பெறவேண்டும் என அணியினரை வாழ்த்துவதோடு **அதிபர், பயிற்றுநர்கள், பொறுப்பாசிரியர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோரையும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.**

- பழைய மாணவர் சங்கம்,
*யா/யூனியன் கல்லூரி,*
*தெல்லிப்பழை.*

(89730)

# நீங்கா நினைவில் ஏழாவது ஆண்டு

அன்னையின் மடியில்
19 - 02 - 1929



ஆண்டவன் அடியில்
04 - 07 - 1994

## திருமதி அனா ஞானமணி நரசிங்கம்

"பிறப்பினில் என்னோடு வாழ்பவன்
இறப்பிலும் என்னோடு வாழ்வான்"
அம்மா! ஓடி மறைந்ததோ ஏழு ஆண்டுகள்
ஓடாமல் நிற்பதோ உங்கள் நினைவுகள்.

தகவல்:
மு.நரசிங்கம்
மாலிசந்தி, வதிரி,
கரவெட்டி.

(89722)

பிரிவால் வாடும்:
கணவன்,
மக்கள், மருமக்கள்,
பேரக்குழந்தைகள்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வி தையல்முத்து சிங்காரவேல்

*(ஓய்வுபெற்ற அதிபர், அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலை)*

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக்வும் கொண்ட செல்வி தையல்முத்து சிங்காரவேல் 02.07.2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்காரவேல் - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (ஆசிரியர்), நடராசா, சின்னத்துரை, அன்னம், தேவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சௌந்தரேஸ்வரி நடராசாவின் மைத்துனியும் நாதசொருபனின் வளர்ப்புத்தாயும், துளசிதாசன், ஸ்கந்தவதனா, மோகனதாசன், தெய்வேந்திரதாசன், தாமரைவதனி, விஜயவதனி, நகுணதாசன், ரமணதாசன், காலஞ்சென்ற சிவதாசன் ஆகியோரின் அன்பு அத்தையும், சுபாகரி, கேசிகா, மதுஷன், நிதுஷன், அனுஷாந், அபிஷாந், நிஞ்ஜியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.07.2001) செவ்வாய்க்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் கேணிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*சதானந்தா பாடசாலை ஒழுங்கை,*
*அளவெட்டி வடக்கு.*
(89707)

தகவல்:
ந.துளசிதாசன்.
(மருமகன்)

## செல்லப்பா நவரத்தினம்

உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட செல்லப்பா நவரத்தினம் நேற்று (03.07.2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - அன்னம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் கலாநிதி (சுவிஸ்), உதயகுமார் (இத்தாலி), தயாநிதி (இததாலி), விசித்ரா(ஜேர்மனி), பிறேமகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பஞ்சலிங்கம், சுமதி, அகிலன், இளங்குமரன், அம்பிகைதேவி (மருநதாளர், வலி.கிழ.பிரதேச சபை, நீர்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற செல்லம்மா, பஞ்சலிங்கம், சோதிமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.07.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*
(89717)

தகவல் :-
பிறேமகுமார்(பீற்றர்)
(மகன்)

## திருமதி தெய்வானைப்பிள்ளை பொன்னையா

(சீதைப்பிள்ளை)

உரும்பிராய் தெற்கைச் சேர்நத திருமதி தெய்வானைப்பிள்ளை பொன்னையா (சீதைப்பிள்ளை) 02.07.2001 திங்கட்கிழமை முற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, பரிபூரணம், தையல்முத்து, முத்துத்தம்பி, நல்லதம்பி ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருமதி மீனாட்சி சிவக்கொழுந்து, திருமதி மகேஸ்வரி சரவணமுத்து (ஓய்வு பெற்ற அதிபர், உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை) மற்றும் திருமதி அமுதமலர் கந்தசாமி, திருமதி இராஜேஸ்வரி குமாரசாமி, தர்மலிங்கம், துரைராசா, திருமதி துதிமலர் வேலாயுதம், விக்கினேஸ்வரன், இந்திரதாஸ், காசிலலிங்கம் (காணி மாவட்டப் பதிவகம், கச்சேரி - யாழ்ப்பாணம்), அற்புதராசா ஆகியோரின் பிரியமுள்ள தாயாரும் காலஞ்சென்றவர்களான ஐ.சிவக்கொழுந்து, க.இ.சரவணமுத்து (ஆசிரியர், சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்), ஆ.வேலாயுதம் மற்றும் சி.கந்தசாமி, ஆ.குமாரசாமி, ஜெயலட்சுமி, இராஜமலர், நாகேஸ்வரி, ரஞ்சினி, சிவானந்தி (யாழ். மாநகரசபை) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் உரும்பிராய வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*'மகேஸ்வரம்'*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*
(89716)

தகவல்:-
பொ.காசிலிங்கமும் சகோதரர்களும்.
(பிள்ளைகள்)

## வயித்திலிங்கம் சோதிலிங்கம்

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய வயித்திலிங்கம்-சோதிலிங்கம் நேற்று (2001.07.03) செவ்வாய்க்கிழமை மூளாயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் - செல்லம்மா அவர்களின் அருமை மகனும், ரதிதேவி (அதிபர், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், ஜனகன் (மாணவன், தொழிநுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), விபுலன் (மாணவன், யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கட்டுடையைச் சேர்ந்த சண்முகம் - தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நடேசலிங்கம் (மலேஷியா) மற்றும் செல்வலிங்கம் (கனடா), ஞானலிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற வாமதேவி (கனடா) மற்றும் விமலாதேவி (கனடா), காலஞ்சென்ற கிருஷ்ணலிங்கம் மற்றும் விஜயதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவகுமாரன் (இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்), சி.பத்மினி, பெ.ராஜீவி, தே.உஷா (பிரான்ஸ்), கு.லோஜினி (ஆசிரியர்), த.யோகினி (நோர்வே), சி.சிவயோகம் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், நெல்விநாயகி (மலேஷியா), சுந்தரேஸ்வரி (கனடா), நவமணி (கொழும்பு), சுப்பிரமணியம் (கனடா), அருமைலிங்கம் (கனடா), கனக சபை (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சி.நாகலிங்கம் அவர்களின் உடன் பிறவாத சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது மூளாய் இல்லத்தில் இன்று (2001.07.04) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பித்தனை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*மூளாய் வீதி, மூளாய்,*
*சுழிபுரம்.*
(89723)

தகவல் :-
திருமதி ர.சோதிலிங்கம்
(அதிபர், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்)

# துயரில் இணைகின்றோம்

முளாய், சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர்
திருமதி ரதிதேவி சோதிலிங்கம் அவர்களின்
அன்புக் கணவரும்
எமது உடன்பிறவாச் சகோதரர்களான
ஜனகன், விபுலன் ஆகியோரின்
அருமைத் தந்தையுமான
**வ.சோதிலிங்கம் அவர்கள்**

இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆற்றொணாத் துயருறும் அதேவேளை, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும், குடும்பத் தலைவனை இழந்த அன்னாரின் குடும்பத் தினருக்கு மனஉறுதியையும் ஆறுதலையும் அளிக்க வேண்டும் என எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகனைப் பணிகின்றோம்.

-முளாய் இளைஞர்கள் சார்பாக
த.முகுந்தன்.

(89733)

# கண்ணீர் மழையில்......



செல்வன்
**பவானந்தன் சண்முகானந்தன் (கண்ணன்)**
*(பழைய மாணவன், ஹாட்லிக் கல்லூரி)*
- குடும்பத்தினர்

(சி17296)

# மரண அறிவித்தல்

செல்வன்
**பவானந்தன் சண்முகானந்தன் (கண்ணன்)**
(பழைய மாணவன், ஹாட்லிக் கல்லூரி)

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்வன் பவானந்தன் சண்முகானந்தன் அவர்கள் 20-06-2001 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பவானந்தன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - எதியோப்பியா - நைஜீரியா - மனோன்மணிதேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசிரியர் சிவசம்பு (சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி), கமலாச்சி பெரியதம்பி - புவனேஸ்வரி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சரவணானந்தனின் பாசமிகு தம்பியும் சிவரமணனின் (யா/அச்சு வேலி மத்திய கல்லூரி) பாசமிகு அண்ணனும், யோகேஸ்வரி, இராச துரை (ஓய்வு பெற்ற அதிகாரி, இறைவரித் திணைக்களம்) ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற சரவணபவானந்தன் (இளைப்பாறிய ஆசிரியர் - கனடா) மற்றும் கருணானந்தன் (சுவிஸ்) ஆறுமுகானந்தன் (உடுப்பிட்டி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), குகேந்திரன் (கனடா), ஆனந்தசுந்தரம் (லண்டன்), செல்வி திலகவதி - பெரியதம்பி (முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்) சரசமாலா (கனடா), ஜெகதேவி, கௌரி (ஆசிரியை, யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), சியாமளா (தென்னை ஆராய்ச்சி நிலையம், நுணுவில), சௌந்தரநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), அனுசியா தேவி (லண்டன்), காலஞ்சென்ற லிங்கராணி (உதயகதிர்காமம்) மற்றும் பரமேஸ்வரி (வதிரி) காலஞ்சென்ற விக்கினேஸ்வரமூர்த்தி மற்றும் சந்திரலிங்கம் (இ.போ.ச.போக்குவரத்துத்துறை) சபாரத்தினம் ஆகியோரின் அன்புப் பெறாமகனும், இராசேஸ்வரன் (லண்டன்), கமலேஸ்வரன் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், அபிராமி (கனடா), அபர்ணா (கனடா) அரவிந் (கனடா), சிவதாசன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) சுபத்திரா (கொழும்பு), தாட்சாயினி (லண்டன்), பிரணவன் (லண்டன்), ஹர்சன் (லண்டன்), தயானி (அச்சுவேலி புனித திரேசாளள் மகளிர் கல்லூரி), செந்தூரன் (யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-07-2001) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

*சிவசக்தி கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

தகவல்:
சி.பவானந்தன்
(தந்தை)

(சி17297)


**2ஆம் தவணைப் பரீட்சை**
திட்டமிட்டபடி
நாளை 05-07-2001
(Poya Day)
நடைபெறும்.
1 முதல் 11 வரை
BOND
(89756)



**விற்பனைக்கு**
- தொலைபேசி மொற்றோலா லைன்
- தொலைபேசி கேபிள் லைன்
- FAX (Panasonic)
- போட்டோப் பிரதி இயந்திரம் (KONICA - 1015)
- லெமினேற்றிங் மெசின் ($A_3$ - Size)
- கொம்பியூட்டர் (PEN. III - RAM - 130 MB; HARD DISK - 8GB)
- பிறின்ரர் (EPSON - LQ 300; 24 Pins)
- RONIO MACHINE (SUPER FAX)
- LETTER PRESS (CHINA PLATE; PADAL MACHINE)
- ஸ்கூட்டர் (L ML T - 5)

தொடர்பு:
விநாயகர் தொலைத் தொடர்பு,
மருதடி,
பிரதான வீதி,
பருத்தித்துறை.
(C17294)



**Sri Murugan**
ஸ்தாபனத்தாரின்
இவ்வார
மலிவு விற்பனையில்...
SoftWare CD'S ரூபா 250/-
இச்சலுகை
09-07-2001 வரை மட்டுமே
உங்கள் தேவைகளுக்கு
முந்துங்கள்
SRI MURUGAN COMPUTER SYSTEMS
303, K.K.S. RD.,
JAFFNA.
SRI MURUGAN COMPUTER SYSTEMS
Dealers for:- DELVON Computers (pvt) Ltd.
TEl. 021 - 2670, 021 - 3588
Fax - 021 - 3214
email:- del - smskr @ cureka.lk (C17290)



**ராஜா** யாழ்ப்பாணம்
3வது வெற்றி வாரமாக
8வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்தராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
CITIZEN சிட்டிசன்
தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே.)
(C17288)



**லஷ்சுமி** இணுவில்.
விஜயகாந்த்,லைலா, நாசர்
நடித்த
கள்ளழகர்
(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (பு.நே.)



**நாகம்ஸ்**
சுன்னாகம்
சுப்பர்ஸ்ரார் விஜயசாந்தி,
சரத்குமார், வெங்கடேஸ்
நடித்த
முதலமைச்சர் ஜெயந்தி
வெண்திரையில் முதன் முதல்
சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தியின் படம்
(ரீல்ஸ் வெளியீடு)
தினசரி 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறுகளில் 6.30 காட்சியும் உண்டு.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பிரதி பிராந்திய பணிப்பாளர்
வலயம் - 4
**உயர்திரு.ந.யோகராஜன்**
J.P.(ALL ISLAND)
B.A.P.G.Dip.in Edu.& Dip.in Tech. Edu.SLTES

அவர்கள் தொழில் நுட்பக்கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் அவரைப் பாராட்டி பல்லாண்டு காலம் சிறப்புற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

*உரும்பிராய்.* (89738) நண்பர்கள், உறவினர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை முதலாம் வருட ஆசிரிய மாணவி
திருமதி வசந்தி தியாகலிங்கம் அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி கறுப்பையா சரஸ்வதி**

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாசாலைச் சமூகம்,
*கோப்பாய் ஆசிரிய கலாசாலை,*
*கோப்பாய்.*

(89725)

# 31ஆம் நாள் நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 23 | 04 |
| 10 | 06 |
| 1938 | 2001 |

**திருமதி தங்கமலர் இராசரத்தினம்**
(பதிவுகாரர் - பளை)

மேதினியிலே அம்ம நீங்கள் மறைந்து
இன்று ஒரு திங்கள் ஆகிவிட்டதே!
இல்லத்து ஒளிவிளக்காய் ஒளிவிட்ட
தீபமே! அம்ம நீ அணைந்ததேன்?
எம் உள்ளத்தில் நிறைந்த உத்தமி நீ
மீண்டும் இல்லத்துக்கு வருவாயோ?

உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

*சிவன் வீதி,*
*திருநெல்வேலி.* (89742) - குடும்பத்தினர்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 18 |
| 11 | 05 |
| 1969 | 2001 |

**பொன்னம்பலம் மலர்விழி (தங்கா)**
(சங்குவேலி வடக்கு, மானிப்பாய்)

அன்னை தந்தையரை இழந்து எமதண்ணை உருமானாய்
கண்ணெனப் போற்றி நாமும் எண்ணிலா கனவு கண்டோம்.
உடன் பிறந்தோர் கதறியழ, சுற்றத்தார் துயரில் மூழ்க
கடுதினில் மறைந்ததென்ன? சடுதியாய் சென்றதேனோ?
விரைந்து நீ வந்திடம்மா! கரைந்து உளம் வாடுகின்றோம்!
அந்தரித்துக் கலங்குகின்றோம்; ஆறுதல் நீ தந்திடம்மா!

பிரிவால் துயருறும்:
*39, இராஜேந்திரா வீதி,*
*யாழ்ப்பாணம்.*
சிறியதாய் தந்தையர்,
சகோதர சகோதரிகள்.

(89745) (தகவல்: பொ.இளம்பருதி.)

## கப்பல் மாலுமி புலிகளால் நேற்று விடுவிப்பு

வவுனியா,ஜூலை4

விடுதலைப் புலிகள் தமது காவலில் வைத்திருந்த கப்பல் மாலுமி ஒருவரை நேற்று விடுவித்து, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 'மிஷன்' என்ற கப்பலின் மாலுமியான ஜயந்த ஜெயக்கொடியையே கிளிநொச்சியில் வைத்துப் புலிகள் விடுவித்துள்ளனர்.

இந்தக் கப்பலின் மாலுமிகளான மேலும் மூவர் இன்னமும் புலிகளின் வசம் உள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது. (க-3-9)

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று மேயர் ரவிராஜ் தெரிவித்தார்.

பொதுமக்களிடம் நேரடியாக இன்றும் நாளையும் சென்று ஆதரவு கோரவிருக்கின்றோம் என்று அங்கு கலந்துகொண்ட பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த ஹர்த்தாலை குடாநாட்டில் மட்டுமன்றி வடக்கு - கிழக்கு மற்றும் மலையகம் எங்கும் அனுஷ்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்லாமல் தலைநகர் கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(க-3-6)

## தமிழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கவில்லை. என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் -

தமிழக நிலை குறித்து முடிவெடுப்பதற்காக நேற்று மாலை கூடிய மத்திய அமைச்சரவை தமிழ்நாடு அரசின் நடவடிக்கை குறித்து மாநில அரசுக்கு கடும் கண்டனமும் எச்சரிக்கையும் தெரிவிப்பது என முடிவு செய்தது.

கருணாநிதி மற்றும் மத்திய அமைச்சர்கள் இருவரைக் கைது செய்த விடயங்களில் சட்டம், அடிப்படை மனித உரிமைகள், பத்திரிகைச் சுதந்திரம், சட்டரீதியான அரசியல் செயற்பாட்டுக்கான சுதந்திரம் ஆகியவற்றை தமிழக அரசு அடியோடு மீறியிருப்பதற்காக அந்த மாநில அரசுக்கு கடும் எச்சரிக்கை தெரிவிப்பது என மத்திய அமைச்சரவை முடிவை செய்தது.

இந்தக் கைது விடயத்தில் குற்றமிழைத்த அதிகாரிகளை அடையாளம் கண்டு உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்தும்படியும் மத்திய அரசு மாநில அரசுக்கு உத்தரவிட்டது. (உ)

## ஸ்ரீரங்கராஜன் தமிழகத்தின் பதில் ஆளுநர்

சென்னை,ஜூலை4

ஆந்திரப் பிரதேச ஆளுநர் ஸ்ரீரங்கராஜன் நேற்றுக் காலை தமிழகத்தின் பதில் ஆளுநர் பதவியையும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பதவியேற்பு வைபவம் தமிழக ஆளுநர் மாளிகையில் இடம்பெற்றது. சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி என்.கே.ஜெயின் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் தமிழக அமைச்சர்கள் உட்பட பலர் ஆளுநர் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொண்டனர். (க-ஒ)

## சிறையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை மருத்துவமனையிலிருந்து சென்ற பொது மருத்துவர்கள் நேற்று அவரைப் பரிசோதித்ததாகவும், சிகிச்சைக்காக பொது மருத்துவமனையில் அவரை அனுமதிக்கும்படி அவர்கள் கோரியதாகவும் கருணாநிதியைச் சிறையில் சந்தித்து விட்டுத் திரும்பிய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான திருமாவளவன் தெரிவித்தார்.

ஆனால் "தி.மு.க. தொண்டர்கள் முப்பத்திஐயாயிரம் பேர் சிறையில் வாடும் போது நான் மட்டும் ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெற மாட்டேன்; விருப்பமானால் மருத்துவர்கள் சிறைக்கு வந்து எனக்குச் சிகிச்சை தரட்டும்" - என்று கருணாநிதி கூறிவிட்டதாக திருமாவளவன் சொன்னார்.

தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சிறையில் இருந்தவாறே எதிர்கொள்ளப் போவதாகவும், பிணையில் வெளியே வரப்போவதில்லை எனவும் கருணாநிதி அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான மதசார்பற்ற அரசியல் கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் இராமதாஸ் நேற்று சிறைக்குச் சென்று கருணாநிதியைப் பார்த்தார். இது மனிதாபிமான அடிப்படையிலான சந்திப்பு என்று அவர் குறிப்பிட்டார். அதில் அரசியல் உள்நோக்கம் ஏதுமில்லை என்றார் இராமதாஸ்.

"1995 இல் வேலூரில் நான் சிறைவைக்கப்பட்ட போது கருணாநிதி என்னை வந்து பார்த்தார். அதற்காக நான் இப்போது அவரைச் சென்று பார்த்தேன்" - என்றும் இராமதாஸ் சொன்னார்.

கருணாநிதி கைது செய்யப்பட்ட முறையை டாக்டர் இராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியும், அவரது அணியில் உள்ள மூப்பனாரின் தமிழ் மாநில காங்கிரஸும் கண்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## 2 மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலப் பொலீஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றம் மூலம் பெற்றனராயினும்-

தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் விலக்கப்பட்டு, வழக்குகள் வாபஸ் பெறப்படாவிட்டால் விடுவிப்பு உத்தரவை ஏற்கப்போவதில்லை என்று இரு மத்திய அமைச்சர்களும் அறிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதை அடுத்து நேற்று மாலை வேலூர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ரி.ஆர். பாலு அங்கிருந்து சென்னையை நோக்கிப் புறப்பட்டார்.

அப்போலோ மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும்போது நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த முரசொலி மாறனுக்கு காவல் விலக்கப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கலைஞர் கருணாநிதி கைது செய்யப்பட்ட சமயம் அந்தப் பணியைச் செய்யவிடாது பொலீஸாரைத் தடுத்ததாகவும், அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இந்த இரு அமைச்சர்கள் மீதும் மாநில காவல் துறையினர் இந்த வழக்குகளில் குற்றம் சுமத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சம்பவம்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான நேற்றைய விசாரணைகளின் போது நீதிமன்ற கட்டளைப்படி இந்தக் கொலை தொடர்பான தடயப் பொருள்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு பரிசோதனைகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நடந்த இடத்துக்கு அண்மித்த பகுதியில் கடமையில் இருந்த பத்துப் படையினரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டதாகவும் நீதிவானிடம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் இந்த விசாரணைகளுக்கு பொறுப்பான அதிகாரி ரஞ்சித் சில்வாவிடம் கீழ்க்கண்ட விவரங்களைச் சமர்ப்பிக்கும்படி பணிப்புரை விடுத்தார்.

✪ இந்தச் சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் இருந்த காவலரண்களின் எண்ணிக்கை.

✪ அந்தக் காவலரண்களில் சம்பவதினம் அன்று மாலை 6மணி முதல மறுநாள் காலை வரை கடமையில் இருந்த சிப்பாய்களின் எண்ணிக்கை.

✪ கடமையில் இருந்த சிப்பாய்களில் ஏற்கனவே வாக்குமூலம் பெறப்பட்ட பத்து சிப்பாய்களைத் தவிர ஏனையோரிடமும் வாக்கு மூலம் பெற்று பூரண அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

✪ இந்த வழக்கில் சந்தேகிக்கப்படும் நபர்களின் கைவிரல் அடையாளங்களை தவறாது பெற்று, சம்பவ இடத்தில் பதிவு செய்த கைவிரல் அடையாளங்களையும், அரச கைவிரல் அடையாளப் பதிவாளரிடம் அனுப்பி பூரண அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். (க-3-6)

## கருணாநிதி கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதை முழு நாடுமே பார்த்துக்கொண்டிருந்ததாகக் குறிப்பிட்ட நீதிவான் அதற்காகப் பொலீஸாரைக் கண்டித்தார்.

"உங்கள் உள்ளம் தசையால் ஆனதா? அல்லது மண்ணால் ஆனதா?" என்று நீதிவான் பொலீஸ் அதிகாரியைப் பார்த்துக் கேட்டார்.

"கருணாநிதியை நள்ளிரவில் கைது செய்ய வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது. அவர் ஓடி ஒளித்துவிடுவார் என்று நினைத்தீர்களா?" என்று நீதிவான் எழுப்பிய கேள்விகளுக்குப் பொலீஸ் தரப்பிலிருந்து மௌனமே பதிலாகக் கிடைத்தது.

சரணடைந்த சென்னை மேயர் ஸ்டாலினைத் தாம் சென்னை மத்திய சிறையில் வைக்கும்படி உத்தரவிட்டிருக்கும்போது அவரை ஏன் மதுரைச் சிறைக்கு மாற்றினீர்கள் என்று காட்டமாகக் கேள்விக் கணை தொடுத்த நீதிவான், அதற்கான பதிலை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கும்படி, பொலீஸாரைப் பணித்தார்.

பிறிதொரு விண்ணப்பம் ஒன்றின் பேரில் நேற்று மாலை, சென்னை மாநகர ஆணையாளர் அ.அச்சரயாலுவிடம் நீதிவான் சில கேள்விகளை எழுப்பினார்.

இவரது முறைப்பாட்டின் பேரிலேயே கருணாநிதியும், ஸ்டாலினும் ஏனையோரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நீதிவானின் கேள்விக்குப் பதிலளித்த மாநகர ஆணையாளர், மேம்பாலம் கட்டுவதில் ஊழல் இடம் பெற்றதா, லஞ்சம் வாங்கப்பட்டதா என்பவை குறித்தெல்லாம் தமக்கு எதுவும் தெரியாது என்று சொன்னார்.

இந்த விவகாரம் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை சரியாகப் பதியப்படவில்லை என்று நீதிவான் சுட்டிக்காட்டினார்.

ஊழல் நடைபெற்றிருப்பதாகப் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டால் அது குறித்து விசாரித்துப் புலனாய்வு செய்வதற்காக அது பற்றிய விடயத்தை ஊழல் தடுப்பு விசாரணைப் பிரிவிடம் பொலீஸார் ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைக்காமல் முறைப்பாடு கிடைத்த உடனேயே தம்மிஷ்டப்படி பொலீஸார் கைது நடவடிக்கையை ஆரம்பித்திருக்கின்றனர் என்பதை நீதிவான் சுட்டிக்காட்டினார். அதைப் பொலீஸார் ஒப்புக்கொண்டனர்.

பொலீஸாரின் இத்தகைய எதேச்சாதிகரமான போக்குக்கு நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்ட கடும் கண்டனத்துக்கு இந்திய செய்தி ஏஜென்ஸிகள் பலவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. (உ)

## அவசர......

தார்.

இந்நிலையில் -

முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறியதால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்திருக்கும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு, அவசரகாலச் சட்ட விதிகளை நீடிகக முடியாத இக்கட்டு நிலைக்குத் தள்ளப்படும் என்று தெரிகின்றது.

அவசரகாலச் சட்ட விதிகளை நீடிக்க முடியாமல் போனால் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் பல நெருக்கடிகளை எதிர்கொள்வர் என்றும் -

எனவே அச்சட்ட விதிகளை நீடிக்கும் பிரேரணை எப்படியும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும்-

அரசுத் தரப்பு பிரசாரம் செய்து வருகின்றது. ஆயினும், அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை இம்முறை நிறைவேற்றுவது சிக்கலான காரியம் என்பதைப் புரிந்து கொண்டுள்ள அரசுத்தரப்பு, அந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடாமல் செய்துவிட்டு -

வேறு வழிமுறையில் - ஜனாதிபதியின் புதிய பிரகடனம் ஒன்றாகத் தற்போதைய அவசரகாலச் சட்ட விதிகளை ஒத்த விதிகளைப் புதிதாக வெளியிடுவது குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது.

இந்த முறையில் அச்சட்ட விதிகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தாலும், ஒரு மாத காலத்துக்குள் மீண்டும் அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கு அங்கீகாரம் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய அவசரகாலச் சட்ட விதிகள் நீடிக்கப்படாமல் காலாவதியானால் அந்தச் சட்ட விதிகளின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடையும் காலாவதியாகும் எனச் சட்ட வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-3)

## குடாநாடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்செயல்களுக்கே வித்திடும் என்பதையும் கூற விரும்புகிறோம் - என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரை ஐ.தே. கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் சந்தித்த சமயம் இந்தக் குண்டுத் தாக்குதல் குறித்து அவரிடம் பிரஸ்தாபித்திருந்தார்.

குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து மக்கள் நெருக்கமாக வாழும் வன்னியின் கரையோரப் பிரதேசங்களான கல்முனை, பூநகரி, கௌதாரி முனை ஆகிய பகுதிகளின் மீது குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்று தூதுவரிடம் அவர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டின் மீதான விமானத் தாக்குதல்களை இந்தியாவும் ஏற்கனவே வன்மையாகக் கண்டித்துள்ளது குறிப்பிடத்தக்கது.(க-3-9)


முழு நிலா நாள் கருத்தரங்கு

பொருள்:- "சமகால யாழ்ப்பாணத்து இளைய தலைமுறை"

வழங்குபவர்:- Dr. சா.சிவயோகன் M.B.B.S.

காலம்:- நாளை(05-07-2001) வியாழக்கிழமை பி.ப.3.30 மணி(இ.நே)

இடம்:- "அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆர்வலர்களை இதில் கலந்து பயன்பெற அழைக்கின்றோம்.

(89700) "அகவொளி" இயக்குநர்.

கணனி மூலம் வீடியோ மிக்சிங்

பலர் இதில் மிகு ஆர்வம் காட்டிவருவதனால் மூன்றாவது பிரிவு ஆரம்பமாகிறது.



Adobe Premiere & Cool 3D

Sat / Sun } 5.00-6.00 பிரிவு-1

Wed / Thu } 3.00-4.00 பிரிவு-2

Mon / Tue } 7.00-8.00 பிரிவு-3

STP Computer World (Pvt.) Limited

54A, Palaly Road, Kantharmadam, Jaffna T.P:2674.

இணுவில் பொருளியற் கல்லூரி

A/L 2002

ஒற்றைப் பதிவு

ஆரம்பம் - 4-7-2001

புதன் - 4.00 p.m.

B.முகுந்தன் (B.B.A (HONS) F.M. Spl.

(89744)

புது புத்தம் புதிய ஓடியோ CD வெளியீடும், விற்பனையும்

✹ நரசிம்மா
✹ வேதம்
✹ லவ் சேனல்
✹ புதிய ரீமிக்ஸ்

✪ இந்த ஒரிஜினல் CD க்கள் 300/- மட்டுமே.

✪ 5க்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவுண்டு.

ITN வீடியோ & ஓடியோ
305, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

(89747)

A/L கணக்கீடு மாணவர்களுக்கான

கணக்கீட்டு நியமம் - 3 (திருத்தப்பட்டது)

வெளிவந்துவிட்டது!

தொகுப்பு: கலைச்செல்வன்

கிடைக்கும் புத்தகசாலைகள்
★ பூபாலசிங்கம் - யாழ்.
★ ஸ்ரீலங்கா - யாழ்.
★ மொடேன் - நெல்லியடி.

ACCOUNTING KALAICHELVAN

(C/17298)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

முழுநிலா நாள் கருத்தரங்கு

இடம் :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்.

காலம் :- நாளை வியாழக்கிழமை (05-07-2001)
பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)

தலைவர்:- திரு.க.சி.குகதாசன்
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கருத்துரை: "சூழலோடு இயைந்த விவசாயம்"
(ECHO FRIENDLY AGRICULTURE)

வழங்குபவர்: திரு.கு.மிகுந்தன்
(தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரும் வருக!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

ஆதரவு:-
பெட்டா எஸன்ஸ் சப்ளையர்ஸ்
104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2386

(C/17299)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.